பிப்ரவரி 2004


www.padippakam.com

ரூ. 5.00



தாராளமயக் கொள்ளையர்கள்

# புதிய ஜனநாயகம்



## கூட்டணி இரண்டு கொள்கை ஒன்று

படிப்பகம்

www.padippakam.com

# போலி கம்யூனிஸ்டுகளின் 'பெரியார்' வியாபாரம்

தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதியான தந்தை பெரியார் வாழ்ந்த காலத்திலும், அதற்குப் பின்னரும் அவரை நிராகரித்து வந்த போலி கம்யூனிஸ்டுகள், இப்போது திடீரென பெரியாரின் சிந்தனைகளைப் பிரச்சாரம் செய்யப் போவதாக நாடகமாடக் கிளம்பிவிட்டனர். நெல்லை மாவட்ட இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் (DYFI) ''கலகக்காரர் தோழர் பெரியார்'' நாடகத்தை 2004-ஜனவரி 9-ஆம் தேதியன்று இரண்டு காட்சிகளாக நடத்தி நிதிவசூலிலும் இறங்கினர். இதையொட்டி அவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில், ''பெரியாரின் 125-வது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்த நேரத்தில் அவரது சிந்தனைகளை மக்கள் மத்தியில் உரக்கச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது'' என்று திடீரென அருள் வந்தவர்கள் போல சாமியாடியுள்ளனர்.

தந்தை பெரியார் பார்ப்பனியத்தை எதிர்த்தார்; பார்ப்பன-இந்துப் பண்டிகைகளையும், புராண - இதிகாச குப்பைகளையும் அம்பலப்படுத்தி, பார்ப்பனரல்லாதோர் இவற்றைக் கொண்டாட வேண்டாம் என்று கோரினார். ஆனால் சி.பி.எம். கட்சியோ, தனது ஊழியர்களுக்கு தீபாவளிக்கு போனசு வழங்குகிறது. கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான தீக்கதிர், தீபாவளிமலர் - கார்த்திகை தீப சிறப்பு மலர் வெளியிட்டு தனது கட்சி ஊழியர்களையும் உழைக்கும் மக்களையும் பக்தி - மூட நம்பிக்கை போதையில் ஆழ்த்தி வருகிறது. இந்த லட்சணத்தில், இச்சந்தர்ப்பவாதிகள், ''இப்போது பெரியார் இல்லையே என்ற ஏக்கம் ஏற்படுகிறது'' என்று வாய் பிளந்து கொட்டாவி விடுகின்றனர். ''சுயமரியாதையைச் சொல்லித் தராத தொலைக்காட்சி பெட்டியிலிருந்து மீட்டெடுக்க, சிந்தனையில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சிட, ஆதரவு தாரீர்!'' என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஓட்டுக்கும் சீட்டுக்கும் நாக்கைத் தொங்க போட்டு சுற்றிச் சுற்றி வந்து சுயமரியாதையை பார்ப்பன போயஸ் தோட்டத்தில் அடகுவைத்து விட்ட இவர்கள், இப்போது இளைஞர்களுக்கு சுயமரியாதை பற்றி உபன்யாசம் செய்ய என்ன யோக்கியதை இருக்கிறது?

இவர்களின் பெரியார் நாடகம் எனும் முற்போக்கு வியாபாரமானது, கட்சித் தலைவர்கள் கார்களிலே உல்லாசப் பயணம் செல்லவும் ஆடம்பர வாழ்வை அனுபவிப்பதற்குமான ஏற்பாடே தவிர, பெரியாரின் சிந்தனைகளைப் பிரச்சாரம் செய்வதற்காக அல்ல. பெரியாரின் சிந்தனைகளைப் பரப்புவதில் இவர்கள் உண்மையானவர்களாக இருந்தால், முதலில் பார்ப்பன - பாசிச ஜெயாவுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சியில் அமர்த்திய மாபெரும் துரோகத்துக்காக மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கட்டும்; பார்ப்பன பண்டிகைகளை அம்பலப்படுத்தி, மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஓயாமல் பிரச்சாரம் செய்யவும் முன்வரட்டும். அதை விடுத்து பாரதிக்கு விழா, விவேகானந்தருக்கு துதி, தீபாவளி - கார்த்திகை தீப சிறப்பு மலர்கள் என்று பார்ப்பனியத்துக்கு பல்லக்குத் தூக்கிக் கொண்டே, பெரியாரின் சிந்தனைகளைப் பரப்புவதாக நாடகமாடும் இவர்களுக்கு ''கலகக்காரர் தோழர் பெரியார்'' நாடகம் நடத்த என்ன அருகதை இருக்கிறது?

தகவல்:
ஃப்ரெடரிக் டக்ளஸ்,
நெல்லை.


## இப்போது விற்பனையில்...



### அரசு சாரா நிறுவனங்கள் (NGOs): ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்

-ஜேம்ஸ் பெட்ராஸ்; ஹென்றி வெல்ட்மெயர்

புதிய ஜனநாயகம் வெளியீடு விலை: ரூ.15

*தன்னார்வக் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் என்று பல்வேறு பெயர்களில் இயங்கிவரும் அரசு சாரா நிறுவனங்கள் புற்றீசலாகப் பெருகிவரக் காரணம் என்ன? இவற்றின் சித்தாந்தம் என்ன? நோக்கம் என்ன? ''அடையாள அரசியல்'' பேசும் அரசு சாரா நிறுவனங்கள், உழைக்கும் மக்களுக்கு நண்பனா, எதிரியா?*

*அரசுசாரா நிறுவனங்களின் தன்மை மற்றும் செயல்பாடுகளைப் பற்றி சுருக்கமாகத் தொகுத்தளிக்கிறது, இந்நூல்.*



### தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். வளர்ந்தது எப்படி?

புதிய ஜனநாயகம் வெளியீடு விலை: ரூ.10

*புதிய ஜனநாயகம் இதழில் வெளியான தொடர் கட்டுரையின் மறுபதிப்பு.*

தமிழகத்தில் நிலவிய பார்ப்பன எதிர்ப்புணர்வை மங்கச் செய்வதற்கும் பகுத்தறிவு - சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை ஒழிப்பதற்கும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பயங்கரவாதிகள் என்னென்ன சதிகளைச் செய்தார்கள் என்பதைத் தொகுத்தளித்து, இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்பதற்கான வழிமுறைகளையும் முன்வைக்கிறது, இந்நூல்.

**நூல் கிடைக்குமிடம்:**

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
✆ 28412367

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

**இதழ் 4**

பிப்ரவரி 2004

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**

## நாடாளுமன்றத் தேர்தல்கள்:

# கூட்டணி இரண்டு - கொள்கை ஒன்று

1999-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 13-ஆவது நாடாளுமன்ற மக்களவையின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னமும் எட்டு மாதங்கள் இருக்கின்றன. ஆனால், அதற்கு முன்பாகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தல்கள் அவசர அவசரமாக நாட்டு மக்கள் மீது திணிக்கப்படுகிறது. கடந்த முறைகூட இது போன்று பதவிக்காலம் முடிவதற்கு முன்னதாகவே, சோனியா - ஜெயலலிதா - முலாயம் - சுர்ஜித் ஆகியோர் கூட்டணி சேர்ந்து வாஜ்பாய் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்த்ததால், தேர்தல்கள் வந்தன. அப்போது குறுகிய காலத்தில் மீண்டும் ஒரு சுமையை மக்கள் மீது ஏற்றுவதா, அடிக்கடி தேர்தல் என்ற சுமையை நாடு தாங்குமா என்று கேட்டு எதிர்த்தரப்பின் மீது ஆளும் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. கும்பல் குற்றஞ்சாட்டியது.

வேண்டும்போது நாடாளுமன்ற மக்களவையைக் கலைத்துவிட்டு, மறுதேர்தல்கள் நடத்துவது பெரும்பான்மை பலத்தைக் கொண்ட பிரதமருக்குள்ள அதிகாரம். அதேபோல வேண்டாத அரசைக் கவிழ்த்துவிட்டு மறுதேர்தல்கள் நடத்தும்படி நிர்பந்திப்பது பெரும்பான்மை ஆதரவைப் பெறும் எதிர்க்கட்சிகளுக்குள்ள உரிமை. ஆனால், மக்களுக்கோ, அத்தகைய அதிகாரமோ, உரிமையோ கிடையவே கிடையாது! ஒருமுறை ஓட்டுப் போட்டுவிட்டால், வெற்றுத்தாளில் முத்திரை (ஸ்டாம்ப்) ஒட்டிக் கையெழுத்து போட்டுக் கொடுத்து விட்டதைப்போல, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அது எவ்வளவு கொடூரமான ஆட்சியாக இருந்தாலும் சகித்துக் கொள்ள வேண்டும். சகிக்க முடியாத போது ஜெயலலிதா, நரேந்திர மோடி, அத்வானி போன்றவர்களின் ஆட்சியைக் கலைக்கவோ, கவிழ்க்கவோ மறுதேர்தல்கள் நடத்திக் கொள்ளவோ மக்களுக்கு அதிகாரமும் உரிமையும் கிடையாது. அதனால்தான் அவர்கள், "என்னை யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது" என்று திமிரோடு தமது கொடூர ஆட்சியைத் தொடருகிறார்கள். இதுதான் முதலாளித்துவ நாடாளுமன்றத்தின் - அதற்காக நடத்தப்படும் தேர்தல்களின் யோக்கியதை!

பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்திற்கு மாறாக, பிரதமருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசர அவசரமாகத் தேர்தல்களை நடத்திவிட பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். தலைமை முடிவு செய்தது. பிப்ரவரியிலேயே தேர்தல்களை முடித்து மார்ச்சில் புதிய ஆட்சி அமைந்து விடும் என்று முதலில் பா.ஜ.க. தலைமை அறிவித்தது. இது அரசுத் தலைவர், தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலின்றி அவசரக் கோலத்தில் வெளியிட்ட அறிவிப்பு. இதனால், பா.ஜ.க தனது திட்டத்தை மேலும் ஒருமாதம் தள்ளிப்போடும்படி நேர்ந்தது.

என்ன காரணத்தால், எந்த நம்பிக்கையில், எதை எதிர்பார்த்து இப்படி செய்கிறார்கள்? எப்படிப் போனாலும் இன்னும் எட்டுமாதங்களில் நாடாளுமன்ற மக்களவைக்கான தேர்தல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இப்போழுதே தேர்தலை நடத்திவிட வேண்டும்; இல்லையானால் அடுத்து வரும் மாதங்களில் நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமை தனக்குப் பாதகமாக மேலும் மோசமாகிவிடும்; அதோடு இப்போது தேர்தலை நடத்தினாலும், ஐந்தாண்டு காலம் கூட்டணி ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டதே ஒரு சாதனைதான் எனப் பீற்றிக் கொள்ளலாம் என்பதும் பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். தலைமையின் கணக்கு. இதோடு, கடந்த காலங்களில் செய்ததைப் போல, சில கோயாபல்சு பாணியிலான பிரச்சாரங்களைச் செய்து, சில மாயைகளை உருவாக்கி வெற்றி பெற்றுவிட முடியும் என்று வாஜ்பாய் - அத்வானி கும்பல் நம்புகிறது.

குட்டையைக் குழப்பி மீன்பிடிப்பதே பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் நீண்டகால அரசியல் தந்திரமாக உள்ளது. அதற்காக ஆளுக்கும், இடத்துக்கும், நேரத்துக்கும் தகுந்தாற்போல் மாறிமாறி முரண்பாடாகப் பேசுவதே அவர்களின் வழக்கமாகவும் உள்ளது. அரசியல் சித்தாந்தத்திலும் அமைப்பு அணுகுமுறையில், அறிவிக்கப்படும் கொள்கையிலும் நடைமுறையிலும் இரட்டை நிலையை மேற்கொள்ளுவது அவர்களின் இயல்பாகவே இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

குஜராத் சட்டப்பேரவைத் தேர்தல்களில் வெற்றி பெற்றவுடன் அது தனது ''இந்துத்துவா'' சித்தாந்தத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. இனி இதே அடிப்படையில் நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து, இரண்டே ஆண்டுகளில் இந்து தேசியத்தை நிலைநாட்டி விடுவோம். குஜராத் இந்துத்துவாவின் பரிசோதனைக் கூடம். அது வெற்றி பெற்றுவிட்டது. சிறுபான்மையினரும், ''மதச்சார்பற்றவர்களும்'' திருந்தா விட்டால் நாடு முழுவதையும் குஜராத் தாக மாற்றுவோம்'' என்று முழங்கினார்கள். அத்வானி மட்டுமல்ல, வாஜ்பாயும் இதையே பிரதிபலித்தார்.

ஆனால், அடுத்து வந்த ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில், இதையெல்லாம் ஒளித்து வைத்துக் கொண்டு அயோத்திக் கூச்சல் - ஆர்ப்பாட்டங்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு ''நல்ல நிர்வாகம் - முன்னேற்றம்'' என்ற முழக்கத்தைக் கையிலெடுத்துக் கொண்டது வாஜ்பாயி - அத்வானி கும்பல். ஐந்து மாநிலத் தேர்தல்கள் முடிந்தவுடன், தேசிய ஜனநாயகக் கூட்டணியைக் கட்டிகாத்து நிலையான ஆட்சி, நல்ல நிர்வாகம், முன்னேற்றம் ஆகிய சாதனைகளுக்கு வெற்றி கிட்டியிருக்கிறது என்று வியாக்கியானம் செய்தார்கள். இனிவரும் தேர்தல்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ''ஆட்சி நிர்வாகத்துக்கான திட்டமே'' தனது முழக்கமாக இருக்கும் என்று உறுதி கூறினர். குஜராத் தேர்தலிலும் அதன் பிறகும் ''இந்துத்துவா'' கூச்சல் போட்ட தொக்காடியா - மோடி - சிங்கால் கும்பல் தலைமறைவாக வைக்கப்பட்டு, மகாஜன் - சுஷ்மா - ஜெட்லி ஆகிய கவர்ச்சி முகங்கள் முன்னிறுத்தப்படுகின்றன.

''இனி தேர்தல் அரசியலில் நான் ஈடுபடமாட்டேன். அடுத்த தேர்தலில் போட்டியிட மாட்டேன்'' என்று கடந்த ஆண்டு ஆரம்பத்தில் தானே முன்வந்து வாஜ்பாயி அறிவித்தார். அப்போது அடுத்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களில் அத்வானிதான் முன்னிறுத்தப்படுவார், அவரே பிரதமராகி ஆட்சி நடத்துவார் என்ற கருத்து பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். தலைமையால் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. ''மேலும் முன்னேறவும், வளர்ச்சிக்கும் வாஜ்பாயியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வாருங்கள்'' என்று பா.ஜ.க தலைவர் வெங்கையா நாயுடு அறைகூவல் விடுக்கிறார்.

இதன் பொருள் என்ன? இந்துத்துவா சித்தாந்தமும் அத்வானி தலைமையும் இப்போது இல்லை, நல்ல நிர்வாகமும் வாஜ்பாய் தலைமையும்தான் ஓட்டுக் கேட்டு வருகிறது. இப்படிச் சொல்லித்தான் கடந்த தேர்தல்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடித்தார்கள். ஆனால், அதன் பிறகு ஒளித்து வைத்திருந்த இந்துத்துவா நிகழ்ச்சி நிரலை வைத்து ஆட்சியிலும் வெளியிலும் என்ன ஆட்டம் போட்டார்கள்; குறிப்பாக, குஜராத்தில் எவ்வாறு கோரத்தாண்டவம் ஆடினார்கள் என்பதை நாடே அறியும்.

இந்தத் தேர்தல்களில், மீண்டும் இந்துத்துவா சித்தாந்தம் அத்வானி தலைமை ஆகியவற்றை ஒளித்து வைத்துக் கொண்டு வாஜ்பாயியை முன்னிறுத்தி நாடகமாடுகிறார்கள். அமெரிக்க அதிபர் தேர்தல் பாணியில் வாஜ்பாயியா சோனியாவா, நாட்டின் அதி உயர்ந்த நிர்வாகப் பொறுப்புக்கு யார் தகுதியானவர் என்று கேட்டு இரண்டு நபர்களுக்கிடையிலான போட்டியாகக் குறுக்கிவிட பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கும்பல் முயற்சிக்கிறது. வாஜ்பாய் அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் பெற்ற அரசியல் தலைவர்; சோதித்தறியப்பட்ட நம்பகமான தேசியத் தலைவர்; இதற்கு மாறாக, எந்தவித அரசியல் - ஆட்சி - நிர்வாகத் திறமையும் அனுபவமும் இல்லாதவர் சோனியா; எல்லாவற்றுக்கும் மேலாக சோனியா ஒரு அந்நிய நாட்டுக்காரி; அவர் தனது மகன் ராகுலையும் பிரியங்காவையும் களத்தில் இறக்கிவிட்டிருக்கிறார்; ஆனால், தாய் - தந்தை இருவரையும் இந்தியராகப் பெற்றவர்கள்தாம் பிரதமர் பதவிக்கு வரமுடியும் என்கிறது பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

இந்து தேசியத்தைவிட, பிறப்பு தேசியம்தான் பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்கு முக்கியமானதாக, ஓட்டுப் பொறுக்குவதற்கு வசதியானதாக மாறிவிட்டது. சோனியா ஒரு அந்நியப் பிறப்பாளர், அவருடைய பிள்ளைகள் இந்தியப் பிறப்பாளர்களாக இருப்பினும் பெற்றோர் இருவரும் இந்தியப் பூர்வகுடிகள் அல்ல; எனவே, இவர்களின் தலைமையை ஏற்க முடியாது என்கின்றனர். ஆனால், இந்த தேசிய விசுவாசிகள் வேறு சில அந்நிய சக்திகளைப் பற்றி மூச்சுவிடுவதில்லை. மாறாக, அவற்றைத் தமது தேர்தல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறார்கள்.

கள்ள நோட்டு - போலி முத்திரைத்தாள் மோசடி முதல் போதைப் பொருள் கடத்தல், குண்டு வெடிப்பு வரை எல்லாவற்றுக்கும், எதற்கெடுத்தாலும் அந்நிய சதி, எல்லை தாண்டிய பயங்கரவாதிகள், பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. நாசவேலை என்று பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். கும்பல் குற்றஞ்சாட்டி வந்தது. இப்போது வாஜ்பாய் ஒரு மாபெரும் சமாதான தேவதூதன்; பாகிஸ்தானை அமைதி வழிக்குத் திரும்பும்படி நிர்பந்திப்பதில் வெற்றி கண்டவர் என்ற பிரச்சாரம் தூள் பறக்கிறது.

இந்த அந்நிய சாதனைக்கு பின்னணியில் வேறொரு அந்நிய சக்தி இருக்கிறது. அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், இந்தியா - பாக். நாடுகளுக்கிடையிலான தாழ்நிலைப் போரை நிறுத்தி அமைதி முயற்சிகளையும், பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதிலும் ஈடுபடவேண்டும் என்று அந்த அந்நிய நண்பர் நிர்பந்திக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் பிரதான தேர்தல் பிரச்சார முழக்கமான ''இந்தியா ஒளிர்கிறது! மிளிருகிறது இந்தியா'', ''நல்லுணர்வு கொள்க'' என்பதற்கு பின்னே ஒரு அந்நிய சக்தி இருக்கிறது. அந்நிய முதலீட்டு நிறுவனங்கள், அந்நிய பன்னாட்டுத் தொழில் கழகங்கள் மற்றும் அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர்கள் மட்டும் கடந்த சில மாதங்களில் 112 ஆயிரம் கோடி ரூபாய் அளவு இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்திருக்கிறார்கள். இதனால் பங்குச் சந்தைக் குறியீடு எண் 6000-க்கும் மேலே எகிறியிருக்கிறது. இதை அடிப்படையாக வைத்து சுதந்திரத்துக்குப் பிறகு எப்போதும் கண்டிராத அளவு 8.4 சதவீத வளர்ச்சி கண்டிருப்பதாக பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் வானத்துக்கும் பூமிக்கும் குதியாட்டம் போடுகிறது.

அதன் அரசியல் தகிடுதத்தங்களுக்கு அப்பால் உள்ள பொருளாதாரப் புள்ளி விவர மோசடிகள் தனியே கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

''ஒளிர்கிறது இந்தியா / மிளிர்கிறது இந்தியா - முன்னெப்போதையும் விட'' என்ற முழக்கத்தின் அடிப்படையில் பத்திரிக்கை மற்றும் வானொலி - வானொளி மூலம் அரசு செலவில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வாரி இறைத்து அரசு விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இதன் மூலம் தனிப்பெரும் இலாபமாக


படிப்பகம்

www.padippakam.com

செய்தி ஊடகங்களுக்கு இலஞ்சம் கொட்டி அளக்கப்படுகிறது. இதற்கு விசுவாசம் காட்டும் விதமாக அவையும் புள்ளி விவரங்கள், கருத்துக் கணிப்புகள், கள ஆய்வுகள், செய்திக் கட்டுரைகள் என்று பல வடிவங்களிலும், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். சார்பாக வதந்திகளையும் கிசுகிசுக்களையும் பரப்புகின்றன.

''இந்தியா ஒளிர்கிறது / மிளிர்கிறது இந்தியா'' என்ற நிரூபிப்பதற்காக உலகப் பொருளாதார நிபுணர்கள் வியந்து போகும் அளவுக்கு வினோதமான வாதங்களை பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். விசுவாச செய்தி ஊடகம் அவிழ்த்து விடுகின்றது. நாட்டில் நுகர்வுக் கலாச்சாரம் பெருகி விட்டது, செலவுப் புரட்சி நடக்கிறது என்று கூறி சில புள்ளி விவரங்களை அள்ளி வீசுகிறார்கள். இந்த நுகர்வுக் கலாச்சாரம் / செலவுப் புரட்சியின் சின்னம் ''செல்போன்கள்'' என்று தொடங்கும் அந்த விசுவாசிகளின் கூற்றுப்படி: 2002 நவம்பரில் 97 லட்சம் பேர் செல்போன் பயன்படுத்தினார்கள். ஒரே ஆண்டில் 2.60 கோடிப் பேராக செல்போனோடு திரிபவர்கள் அதிகமாகி விட்டார்களாம். அதாவது செல்போனுக்கு மட்டுமே 8000 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். கடந்த வருடத்தில் 8.7 லட்சம் கார்களும், 53 லட்சம் இரு சக்கர வாகனங்களும் 20 லட்சம் கம்ப்யூட்டர்களும் இந்தியர்கள் வாங்கிக் குவித்திருக்கிறார்கள்.

முன்பு காரை 10-12 வருடம் வைத்திருந்தனர், ஆனால், இப்போது கார்களை 2-5 ஆண்டுகள் மட்டுமே பயன்படுத்தி விட்டு வேறு கார் வாங்கி விடுகின்றனர். ஒரு செல்போனை சராசரியாக 14 மாதங்களே பயன்படுத்துகிறார்கள். கடன் வாங்கி நுகர்பொருட்கள் வாங்குவதும் பெருகி விட்டது. வங்கிகள் நுகர்வு கடன் கொடுப்பது 70 சதவீதம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் ஒன்றே கால் இலட்சம் கோடி ரூபாய் நுகர்வுக் கடனாக வங்கிகள் கொடுத்துள்ளன.

நுகர்வோரின் சராசரி வயது குறைந்து விட்டது. டெல்லியில் வாரம் ஒரு உணவகம் திறக்கப்படுகிறது. கால் செண்டர்கள் காளான்களாய் முளைத்து விட்டன. 20 வயதுக்குள்ளேயே உயர் சம்பளம் பெருவோர் அதிகமாகி விட்டார்கள். 18, 19 வயதுக்குள் உயர் சம்பளம் பெற்று செல்போன்களோடு உணவகங்களில் சாப்பிடுபவர்கள் பெருகி விட்டார்கள். உணவுப் பொருட்களுக்கான செலவு குறைந்துவிட்ட அதே சமயம், செல்போன்கள், குளிர்பதனச் சாதனங்கள், மின்னணு பொழுதுபோக்குச் சாதனங்கள், சலவை இயந்திரங்கள், ஓட்டல்கள், எரிவாயு இணைப்புகள், குளிர்பானங்கள் என்று நுகர்விலும் அழுத்தம் திசை மாறிவிட்டது.

பங்குச் சந்தைக் குறியீடு 6000-க்கு மேல் எகிறி விட்டது. சிறு முதலீட்டாளர்கள் மூன்றே மாதங்களில் 7000 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளார்கள். அன்னியச் செலாவணி சாதனை அளவை எட்டிவிட்டது. 5.5 இலட்சத்தில் இருந்து 20 லட்சம் ரூபாய் வரை 13 வகை கார்கள் சந்தையில் உள்ளன. சொகுசு கார் ஓட்டுவதற்குப் புதுப்புது வசதிகள் கொண்ட கார்கள், சுலபத் தவணைகள், தாராளமான கடன் வசதி, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் கொண்டாட்டம்தான்! கார்களை விட அதிகமான வகையில் இரு சக்கர வாகனங்களில் முன்னணித் தொழிலதிபர்கள், கம்பெனி அதிகாரிகள், சினிமா பிரபலங்கள், கல்லூரி மாணவர்கள் பறக்கிறார்கள்.

- இப்படி அடுக்கிக் கொண்டே போகிறது ஒளிரும் இந்தியா - முன்னெப்போதையும்விட பிரகாசமாக! இன்னும் உயர்ரக மது விற்பனை, கேளிக்கை - சூதாட்ட விடுதிகள், சட்டபூர்வ விபச்சார விடுதிகள் - அப்புறம் எயிட்ஸ் எண்ணிக்கை, சினிமா முதலீடு - இலாபம் என்று எவ்வளவோ துறைகளில் இந்தியா ஒளிர்வது பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஆட்சியின் சாதனைப் பட்டியலில் ஏனோ இடம் பெறவில்லை.

வாஜ்பாயி - அத்வானி கும்பல் இந்த நாட்டை ஐந்தாண்டுகளாக ஆண்டு வருகிறது. இந்த ஆட்சிக் காலத்தில் தமது பொருளாதார சாதனை என்னவென்பதை மூடி மறைத்துவிட்டு ஒரு ஆறுமாதக் கணக்குகளை வைத்துக் கொண்டு புள்ளி விவர மோசடி செய்கிறார்கள். அதுவும் எப்படி? நாட்டின் அடிப்படைத் தொழில்களான விவசாயம் - ஆலை உற்பத்தியை மையமாகக் கொண்டு தொகுக்கவில்லை. ''இன்று மட்டுமல்ல என்றுமே நுகர்வோர்தான் இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்திருக்கிறார்கள். பெரிய பெரிய தொழிலதிபர்களின் பல ஆயிரம் கோடி ரூபாய் திட்டங்கள், அரசுகளின் மொத்த திட்டங்களை விட நுகர்வோர் செய்யும் செலவுகளே முக்கியத்துவம் பெருகின்றன. அவர்களின் செல்வுகள் மட்டுமே இந்தியப் பொருளாதார இயக்கத்தின் மூன்றில் இரண்டு பங்கைப் பிடிக்கிறது'' என்கிறது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் விசுவாச ஏடு இந்தியா டுடே.

இந்த பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் ஆட்சியில் ஒளிருபவர்கள் / மிளிருபவர்கள் பெருநகரங்களில் வாழும் மேல்தட்டு நடுத்தர மற்றும் மேட்டுக்குடியினர்தாம் என்பதில் சந்தேகமில்லை. நுகர்வுக் கலாச்சார / செலவுப் புரட்சி நாயகர்களான இவர்கள்தாம் இன்றைய பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தால் நல்லுணர்வு கொள்ளக் கூடியவர்கள். இதனால் கொள்ளை இலாபமீட்டி ஆதாயம் அடைபவர்களோ இந்திய ஏகபோக தரகு அதிகார வர்க்க முதலாளிகளும், பன்னாட்டுத் தொழில் கழகங்களின் ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகள்தாம்.

ஆனால், வேறொரு இந்தியா இருக்கிறது. அது ஒளிரவும் இல்லை. மிளிரவும் இல்லை. இருண்டு கிடக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான ஆலைகள் மூடப்பட்டு இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசப்படுகின்றனர். கோடிக்கணக்கான விவசாயிகள் வாழ வழியின்றித் தவிக்கிறார்கள். தற்கொலைக்கும் பட்டினிச் சாவிற்கும் பலியாகிறார்கள். கிராமப்புற நகர்ப்புற வேலை வாய்ப்புகள் இல்லவே இல்லை. வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இளைஞர்களுக்கு எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. மாணவர்கள் கல்வியைத் தொடர முடியவில்லை. மேட்டுக்குடியினருக்கே உயர் கல்வி; விவசாயம் பாழ்பட்டுக் கிடக்கிறது; நெசவாளிகளுக்கு கஞ்சித் தொட்டி; சிறு தொழில் பட்டறை முதலாளிகள் கூட ஓட்டாண்டிகளாகின்றனர்; ''நியாயவிலை''க் கடைகள் மூடப்படுகின்றன; ஏழை - எளிய மக்களுக்கான அரசு சேவைகள் மறுக்கப்படுகின்றன; வாழவழியின்றி மக்கள் வாழ்வில் இருள் சூழ்கிறது; சாலைகள் முதல் தண்ணீர் வரை எல்லாம் தனியார்மயம்.

இந்த நிலையில் இந்தியா ஒளிர்கிறது! நல்லுணர்வு கொள்கை என்று பித்தலாட்டம் செய்து மீண்டும் ஆட்சியை பிடிக்க எத்தணிக்கும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு


படிப்பகம்

மாற்று ஆட்சி உரிமை கோரி வரும் எதிர்த்தரப்பின் நிலை என்ன?

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான இந்துத்துவா அல்லது மதவாத பாசிச சக்திகளே நாட்டுக்கும் மக்களுக்கும் பேராபத்து விளைவிக்கும் இன்றைய ஆட்சியாளர்கள். அவர்களை எதிர்க்கும் மதச்சார்பற்ற அரசியல் கட்சிகளை எல்லாம் ஒரு அணியில் திரட்டி இந்துத்துவா மதவாத பாசிச சக்திகள் மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதே தமது இலட்சியம் என்று கூறிக் கொண்டு காங்கிரசு - போலி கம்யூனிஸ்டுகள் - தி.மு.க. மற்றும் பல மாநிலங்களில் உள்ள சில அரசியல் கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். தலைமையிலும், காங்கிரசு தலைமையிலும் உள்ள இரண்டு கூட்டணிகளில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் அணிவகுத்து நிற்கின்றன. நாடு தழுவிய இந்தக் கூட்டணிகள்தாம் இரண்டே தவிர, இரண்டுக்குமே திட்டம் - கொள்கை - நடைமுறையில் அடிப்படையிலான வேறுபாடுகள் கிடையாது.

செய்தி ஊடகங்களாலும் கருத்துக் கணிப்பு நிறுவனங்களாலும் எடுக்கப்படும் கள ஆய்வுகள் ஒவ்வொன்றிலும் மக்கள் தம்மைப் பாதிக்கும் முதன்மையான பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி உயர்வும், மூன்றாவதாக இலஞ்ச - ஊழலும் தாம் என்று தவறாது மீண்டும் மீண்டும் கூறுகின்றனர். தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையால் இவை பன்மடங்குப் பெருகியுள்ளதோடு, நிரந்தரமாகி விட்டன. இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையிலும் நாட்டை மறுகாலனியாக்குவதிலும் ஆளும் கட்சிக்கும், எதிர்த்தரப்புக் கூட்டணிகளுக்குமிடையே எந்தவொரு வேறுபாடும் கிடையாது.

மதச்சார்பற்ற அரசியல் ''பண்ணுவதில்'' கூட இரண்டு கூட்டாளிகளுக்கிடையே அணுகுமுறையில்தான் வேறுபாடு உள்ளது. 1992 பாபரி மசூதி இடிப்புக்கு, 1949-இல் இருந்தே காங்கிரசு உடந்தையாக இருந்திருக்கிறது. பாபரி மசூதிக்குள் இராமன் - சீதை பொம்மையை வைத்து பிரச்சினையைக் கிளப்புவதற்கு நேரு அரசு துணைபோனது; மூடப்பட்டிருந்த பாபரி மசூதியில் இந்துமத வெறியர்கள் பூசை நடத்த பேரன் ராஜீவ் கதவு திறந்துவிட்டார். இடிப்பதற்கு நேரு பரம்பரையின் விசுவாசி நரசிம்ம ராவ் துணைபோனார். இந்து மதவெறியர்களுக்கு இணக்கமாக இருந்து காங்கிரசு ஆளும் மாநில அரசுகள் துணைபோகின்றன. மொத்தத்தில் மிதவாத இந்து மதவாதமே மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் அணுகுமுறையாக உள்ளது என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, ஆளும் கூட்டணி, எதிர்க் கூட்டணி என்று ஓட்டுக் கட்சிகள் இரண்டு கூட்டணிகள் அமைத்திருந்தாலும் இரண்டுமே ஒரே திட்டம் - கொள்கை - நடைமுறையைக் கொண்டிருக்கின்றன. அவை நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக நம்பிக்கைத் துரோகம் செய்பவை! இரண்டையுமே நிராகரிப்பதுதான் சரியான நிலை. மூன்றாவது அணி என்று கூறிக் கொள்ளும் ஓட்டுக் கட்சிகள் எல்லாம், அந்த முதலிரண்டு அணியில் இடம் கிடைக்காததால் ''...சீ...சீ இந்தப் பழம் புளிக்கும்'' என்று ஒதுங்கும் பிழைப்புவாதிகளின் அணி! ஆக, எதிரிகள் எல்லாம் ஏதாவது ஒரு மக்கள் விரோத அணியில் திரண்டு விட்டார்கள். இனி எல்லா ஓட்டுக் கட்சிகளுக்கும் எதிராக மக்கள் ஒரு தனி அணியாகத் திரண்டாக வேண்டும். ●







''இந்தியா ஒளிர்கிறது'' என்ற பா.ஜ.க. கூட்டணி அரசின் கோயபல்சு பாணி பிரச்சார விளம்பரங்கள் (மேலே); (கீழே) இந்தியத் தொடர்வண்டித்துறை நடத்திய வேலைக்கான தேர்வுகளை எழுத, வட மாநிலங்களில் இருந்து சென்னைக்கு வந்து குவிந்த வேலை தேடும் இளைஞர்கள்: எதிரும் புதிருமான இந்தியா.

www.padippakam.com



மறுகாலனிய, பார்ப்பனியப் பண்பாட்டு படையெடுப்புக்கெதிரான போர் முழக்கம்

# தமிழ் மக்கள் இசை விழா

பதினொன்றாம் ஆண்டு

பிப்ரவரி-21, 2004, சனிக்கிழமை,

தஞ்சை - திருவள்ளுவர் திடல்.

## "துவளாதே தமிழகமே... போராடு!"

### காலை 10 மணி முதல் - கருத்தரங்கம்

தலைமையுரை : **தோழர் காளியப்பன்,**
மாநில இணைச் செயலர்,
ம.க.இ.க., தமிழ்நாடு.

உரையாற்றுவோர்: **முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே,**
மும்பை.

**தோழர் ஆ. சிவசுப்பிரமணியன்**

**தோழர் லட்சுமணப் பெருமாள்,**
எழுத்தாளர்.

**பேரா. பெரியார்தாசன்,** சென்னை.

**மையக் கலைக்குழு,** ம.க.இ.க.,

மதுரை நிஜ நாடக இயக்கம் வழங்கும்

**"கலகக்காரர் தோழர் பெரியார்"** - நாடகம்

நெறியாளுகை: **பேரா. மு. ராமசாமி**

### மாலை - கலை நிகழ்ச்சிகள் - நேருரைகள்

- **தப்பாட்டம் : வீரசோழ தப்பாட்டக் கலைக்குழு,** *ரெட்டிப்பாளையம், தஞ்சை.*
- **பெரிய மேளம் : முனுசாமி குழுவினர்,** *கருவெட்டாம்பாறை, திருவண்ணாமலை.*
- **தமுருக் கொட்டு : அன்பரசன் தமுரு குழு,** *சிதம்பரம்.*
- **உறுமி மேளம்: பெரியண்ணன் குழுவினர் மற்றும் சரவணன்,** *மதுரை.*
- **சுழல் கோலாட்டம் : தஞ்சை மாணவர்கள்.**
- **பாசிசப் பேயோட்டல் : ம.க.இ.க. கலைக்குழு மற்றும் பெரியண்ணன் குழுவினர்,** *மதுரை.*
- **கலை நிகழ்ச்சி: பாவலர் ஓம் முத்துமாரி,** *(செயலர், நலிந்த கலைஞர்கள் நல்வாழ்வுச்சங்கம்)* மற்றும் குழுவினர், திருவேங்கடம், நெல்லை.
- **நாடகம்: வி.வி.மு.,** *கம்பம்.*
- **சிறுவர்களின் கலைநிகழ்ச்சி.**
- ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நீக்கத்தை எதிர்த்து மும்பையிலுள்ள டாடா நிறுவனத்தின் தலைமை அலுவலக வாயிலில் தீக்குளித்து இறந்த **ஆனந்த் தால்வி** (சிவசேனா தொண்டர்), **அக்தர் கான்** (தமிழ் முசுலீம்) ஆகிய முன்னணித் தொழிலாளர்களின் மனைவியர் நேருரை.
- விவசாயித்தின் மீதான தாக்குதலால் மண்ணை விட்டு மரணத்திற்குத் துரத்தப்படும் விவசாயிகளின் கண்ணீர்க் கதை: **தோழர் சிவகாமு,** வி.வி.மு., உசிலம்பட்டி.
- பணி நீக்கம் செய்யப்பட்டதால் பட்டினிச் சாவுக்கும் தற்கொலைக்கும் தள்ளப்பட்ட தமிழகத்தின் சாலைப் பணியாளர்கள்: குடும்பத்தினர் / சங்கத்தினரின் நேருரை.
- **நேருரைகளின் கண்ணீரில் கவிதைத் தீ மூட்டும் ம.க.இ.க. கலைக்குழுவின் பாடல்கள்.**
- **இராக்: இசைச் சித்திரம்**
- **ம.க.இ.க. கலைக்குழுவின் புரட்சிகரக் கலை நிகழ்ச்சி**
- **"துவளாதே தமிழகமே.. போராடு!" - இசை முழக்கம்.**

## மக்கள் கலை இலக்கியக் கழகம் - தமிழ்நாடு

22.2.2004 பிற்பகல் - தஞ்சையில்

**தலித் விடுதலை திசைவழியும், விலகல்களும்**

கருத்தரங்கம்

உரை:
முனைவர்
**ஆனந்த் தெல்தும்ப்டே,**
*மும்பை.*

கருத்தரங்கம் நடைபெறும் இடமும் துவங்கும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

## தாராளமயம்:

# ஊழலை உற்பத்தி செய்யும் சாக்கடை

நமது நாட்டில் தாராளமயம் புகுத்தப்பட்டு, ஒரு மாமங்கம் உருண்டோடிவிட்டது. அலாவுதீனின் கையில் கிடைத்த அற்புத விளக்கைப் போலத் தூக்கிக் கொண்டாடப்படும் இத்தாராளமயம் சாதித்தது என்ன என்ற கேள்வியை யாராவது கேட்டால், தாராளமயத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் ''அந்நியச் செலவாணி கையிருப்பு அதிகரித்திருக்கிறது; பங்குச் சந்தை வியாபாரம் சூடாக நடந்து வருகிறது; கணினி மென்பொருள் ஏற்றுமதியில் இந்தியா கொடிகட்டிப் பறக்கிறது'' என ஒரு சாதனைப் பட்டியலை மூச்சுவிடாமல் வாசித்து விடுகிறார்கள்.

தாராளமயத்தின் இந்தச் சாதனைப் பட்டியலில் இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் நமது விருப்பம். தாராளமயத்தின் பின்னர் செம சூடு பிடித்துள்ள அந்தச் சாதனையின் பெயர் ''ஊழல்!'' கடந்த இரண்டு, மூன்று மாதங்களில் மட்டும், பல கோடி ரூபாய் பெறுமான ஐந்து ஊழல்கள் அம்பலமாகியுள்ளன.

● சென்னை நகரின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டமொன்றை தமிழக அரசு, கடந்த ஜூன் மாதம் அறிவித்திருந்தது. 1750 கோடி ரூபாய் பெறுமான இத்திட்டத்தைப் பெற, ரசிய அரசு நிறுவனமான குருனிச்செவ்வும், பிரான்சு நாட்டைச் சேர்ந்த மார்சன் இன்க் என்ற நிறுவனமும் போட்டியிட்டன. தமிழக அரசு கோரிய தொழில் நுட்பத் தகுதிகள் பிரான்சு நிறுவனத்திற்கு இல்லாததால், அந்நிறுவனம் போட்ட ஒப்பந்தப் புள்ளியை (டெண்டர்) சென்னை குடிநீர் வடிகால் வாரியம் ஒதுக்கிவிட்டது. அதே சமயம், ரசிய நிறுவனத்திடமிருந்து ''வெயிட்டான'' தொகை எதையும் பெறாமல், அந்நிறுவனத்தோடு ஒப்பந்தம் போடவும் தமிழக அரசுக்கு விருப்பமில்லை.

இவ்வாரியத்தின் நிதிக் கட்டுப்பாடு அதிகாரி வெங்கடேசுவரனும், மற்றொரு உயர் அதிகாரி சூரிய நாராயண சிங்கும், ரசிய தூதரகத்திற்கே நேரடியாகச் சென்று, கமிசன் பற்றி பேரம் நடத்தியுள்ளனர். மேலிடம் வரை பணம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை ரசிய தூதரக அதிகாரிகளுக்கு விளக்கிய இந்த அதிகாரிகள், ''ஒப்பந்தம் போட நாங்கள் தயார்; 50 கோடி ரூபாய் கமிசன் தர நீங்கள் தயாரா?'' எனப் பச்சையாகவே பேரம் நடத்தியதாகக் கூறப்படுகிறது. குருனிச்செவ் நிறுவனம் கமிசன் தர மறுத்துவிட்டதால், அந்நிறுவனத்தின் டெண்டரையும் கழித்துக் கட்டிவிட்டதோடு, இந்தத் திட்டத்திற்காக மறுடெண்டர் கோரி விளம்பரமும் கொடுத்தது, குடிநீர் வடிகால் வாரியம்.

குருனிச்செவ் நிறுவனத்தின் இந்திய முகவர் சுப்பிரமணியம் திருவிக்ரமன், தற்பொழுது தமிழக அரசின் மறுடெண்டரை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார். ''குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநரும், சில மூத்த அமைச்சர்களும் 50 கோடி வரை எங்களிடம் இலஞ்சம் கேட்டார்கள். அதை நாங்கள் தரவில்லை என்பதால்தான் எங்கள் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டுள்ளது'' என மனுவில் குற்றஞ்சாட்டியிருக்கிறார், சுப்பிரமணியம் திருவிக்ரமன். இவ்வழக்கை விசாரித்து வரும் சென்னை உயர்நீதி மன்றம் தமிழக அரசின் மறுடெண்டருக்குத் தடை விதித்திருப்பதோடு, ''குருனிச்செவ் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பூர்வாங்க ஆதாரமிருப்பதாகவும்'' கூறியிருக்கிறது.

இலஞ்சம் வாங்கும்பொழுது சிக்கிக் கொண்டதால் பதவி பறிக்கப்பட்ட பா.ஜ.க.வின் முன்னாள் மத்திய **அமைச்சர் திலீப்சிங் ஜூடேவ்.**



● அரியானா மாநில அரசின் ஆரம்பக் கல்வித் துறை, 2000-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நேர்முகத் தேர்வு ஒன்றினை நடத்தி, 3,206 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தது. அம்மாநில முதல்வர் சௌதாலா, நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பதிலாக, தான் கொடுக்கும் பட்டியலில் உள்ள நபர்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என ஆரம்பக் கல்வி இயக்குநர் சஞ்சீவ் குமாரை நேரடியாகக் கூப்பிட்டு வாய்மொழியாக உத்தரவிட்டுள்ளார். சௌதாலா கொடுத்த பட்டியலை வாங்கிக் கொண்ட சஞ்சீவ் குமார், அதை ஒதுக்கி வைத்துவிட்டு, நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணையினை வழங்கிவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த சௌதாலா, சஞ்சீவ் குமாரை ஆரம்பக் கல்வி இயக்குநர் பதவியில் இருந்து தூக்கியடித்தார். அந்த தண்டனைகூட பத்தாது எனக் கருவிக் கொண்ட அவர், சஞ்சீவ் குமார் மீது இரண்டு ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, அவரைப் பணியில்' இருந்து இடைநீக்கமும் செய்துள்ளார்.

இந்த அதிகார அத்துமீறல்கள் குறித்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ள சஞ்சீவ் குமார், ''ஒரு ஆசிரியர் பதவிக்கு ஒரு இலட்சம்'' என்ற வீதத்தில் சௌதாலா இலஞ்சம் வாங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆசிரியர் நியமன ஊழலை, மையப்புலனாய்வுத் துறை விசாரிக்கும்படி உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே சௌதாலாவின் நெருங்கிய கூட்டாளியான போலி சாமியார் சந்திராசாமி, சஞ்சீவ் குமாரை தனது ஆசிரமத்துக்கு அழைத்து, ''சௌதாலாவுக்கு எதிரான வழக்கைத் திரும்பப் பெறாவிட்டால், உயிர் உடம்பில் தாங்காது'' என மிரட்டியிருக்கிறார். சந்திராசாமியின் மிரட்டலை



படிப்பகம்


www.padippakam.com


இரகசியமாக ஒலிப்பேழையில் பதிவு செய்து கொண்ட சஞ்சீவ் குமார், அந்த ஒலிப்பேழையை உச்சநீதி மன்றத்தில் ஒப்படைத்திருக்கிறார். சௌதாலா கும்பலால், சஞ்சீவ் குமாரின் உயிருக்கு அபாயம் ஏற்படலாம் என்பதால், சஞ்சீவ் குமாருக்கு தில்லி போலீசு பாது காப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

● பஞ்சாப் மாநிலத்தின் அகாலிதள கட்சித் தலைவரும், அம்மாநில முன்னாள் முதல்வருமான பிரகாஷ் சிங் பாதல்; அவரது மனைவி சுரிந்தர் கௌர்; பாதலின் மகனும், நாடாளு மன்ற மேலவை உறுப்பினருமான சுக்பிர் பாதல் ஆகிய மூவரும் வருமா னத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கில் கைது செய்யப்பட்டு, தற்பொழுது பிணையில் வெளியே வந்துள்ளனர். பிரகாஷ் சிங் பாதல், 1997 முதல் 2002 முடிய முதல்வராக இருந்த காலத்தில் மட்டும் 78 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் சொத்து சேர்த்தி ருப்பதாகவும்; பாதல், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாங்கிக் குவித் துள்ள சொத்துக்களின் சந்தை மதிப்பு 4,326 கோடி ரூபாய் என்றும் பஞ்சாபின் ஊழல் தடுப்பு போலீசு அதி காரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

● ''ஹை-டெக்'' முதல்வர் என்ற பந்தாவோடு வலம்வரும் சந்திரபாபு நாயுடு சம்பந்தப்பட்ட சாராய பேர ஊழல் தற்பொழுது நீதிமன்ற விசார ணையில் உள்ளது. ஆந்திர மாநில அரசு, 1997-க்கும் 2000-க்கும் இடைப்பட்ட காலத்தில், ஏறத்தாழ 550 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்து, பல்வேறு தனியார் சாராய ஆலைகளில் இருந்து சீமைச் சாரா யத்தைக் கொள்முதல் செய்துள்ளதா கவும், இந்த முறைகேடான வியாபா ரத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்டு அமைச்சர்களுக்குப் பங்கிருப்பதாகவும் குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள ஹைதராபாத் நகரக் குற்றவியல் நீதிமன்றம், இம்முறை கேடு பற்றி விசாரிக்குமாறு அம்மாநில ஊழல் தடுப்பு போலீசாருக்கு உத்தர விட்டுள்ளது.

இவை தவிர, மைய சுற்றுச் சுழல் மற்றும் வனத்துறையின் இணை அமைச்சராக இருந்த திலீப் சிங் ஜூடேவ், ஒரிசா மற்றும் சட்டீஸ்கர் மாநிலங்களில் உள்ள சுரங்கங்களை ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு விடுவதற்காக இலஞ்சம் வாங்கியது; 30,000 கோடி ரூபாய்





''தலித் சகோதரி'' மாயாவதி வாங்கிக் குவித்துள்ள சொத்துக்களில் ஒரு துளி.

பெறுமான போலி முத்திரைத் தாள் ஊழலில் ஆந்திரா, கர்நாடகா, மகா ராஷ்டிரா மாநிலங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், ஓட்டுக் கட்சித் தலைவர்களுக்குத் தொடர்பி ருப்பதும்; இந்த ஊழல் காரணமாக மகாராஷ்டிராவின் உள்துறை அமைச்ச ராக இருந்த சஜ்ஜன் புஜ்பால் வேறொரு நொண்டிச் சாக்கை கூறி, பதவி விலகியதும் கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்குள்தான் நடந்தன.

●●●

**தா**ராளமயத்திற்கு முன்பு இந்தி யாவில் இலஞ்சமும், ஊழலும், அதிகார முறைகேடுகளும் நடக்கவே யில்லை என்று கூறிவிட முடியாது எனினும், தாராளமயத்தின் பின்தான் இந்தச் சட்டவிரோத - சமூக விரோதக் குற்றங்கள் ஒரு புதிய பரிமாணத்தைத் தொட்டன. தாராளமயத்திற்கு முன்பு பண மதிப்பில் இலட்சங்களோடு முடிந்து போன இலஞ்சமும், ஊழலும், ராஜீவ் அறிமுகப்படுத்தி புதிய பொரு ளாதாரக் கொள்கையின் பின்பு, நூறு கோடிகளைத் தொட்டது; (போஃபார்ஸ் ஊழல்) தாராளமயத்தின் பின்னரோ, இலஞ்சமாகப் பெறும் தொகையின் மதிப்பு பல்லாயிரம் கோடி என்பது சர்வ சாதாரணமானது. இலஞ்சம் வாங்கியது வெளியே தெரிந்தால் வெட்கக்கேடு என்ற நிலை போய், இலஞ்சம் வாங்குவது வெளிப்படை யாகவே தற்பொழுது நியாயப்படுத்தப் படுகிறது. இலஞ்சம் வாங்கும் முத லைகள் அனைவரும், தாங்கள் அடித்த கொள்ளை இவ்வளவுதான் என்பதை, சொத்துக்களை வாங்கிக் குவிப்பதன் மூலம் வெளிப்படையாகவே காட்டிக் கொள்ளுகிறார்கள். இப்படி இந்தப் புதிய பரிமாணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

மேலும், தனியார்மயம் - தாராளம யத்தின் உயிர் நாடி எனக் கூறப்படும் பங்குச் சந்தை வியாபாரத்திலும்; பொதுத்துறையைத் தனியாருக்கு விற்பதிலும் நடைபெறும் மோசடிகள், தாராளமயமும், ஊழலும் உடன் பிறவா சகோதரர்கள் என்பதைப் பச்சையாகவே காட்டி வருகின்றன.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ''கார்னர் ஹவுஸ்'' என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள ''ஊழல் ஏற்றுமதி: தனியார்மயம் - பன்னாட்டு நிறுவனங்கள் - இலஞ்சம்'' என்ற நூலில், ''ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த தொழிற்கழகங்கள் வருட மொன்றுக்கு அதிகாரிகள் - அரசியல் வாதிகளுக்குக் கொடுக்கும் இலஞ்சம் 3,60,000 கோடி ரூபாய் என்ற உண்மையை'' ஆதாரத்தோடு அம்ப லப்படுத்தியுள்ளது; மேலும், அந்நூலில், ''ஏழை நாடுகளில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களைத் தனி யார்மயமாக்கி வருவதுதான் இலஞ் சமும், ஊழலும், கட்டுக் கடங்காமல் வளர்ந்து செல்வதற்குக் காரணம்'' என்றும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் வர்த்தகத்துறை 1999-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், ''கடந்த ஐந்தாண்டு களில் 6,52,500 கோடி ரூபாய் பெறு மான 294 வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தானதற்கு இலஞ்சம் மிக முக்கிய காரணம்'' எனக் குறிப்பிட்டுள் ளது.

இதற்காக ஆதாரங்களைத் தேடி அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டிய தில்லை; நமது நாட்டிலேயே அவை பச்சையாக அம்பலமாகியுள்ளன.

● அமெரிக்கப் பன்னாட்டு நிறுவ னமான என்ரான், மகாராஷ்டிரா மாநி லத்தில் மின்நிலையம் அமைத்த பொழுது, இந்தியர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 80 கோடி செலவிட் டதாகக் கணக்கு காட்டியது. என்ரா னிடம் காசு வாங்கி கல்வி பயின்ற இந்தியர்கள் சரத்பவார் - பால்தாக்கரே கும்பலைத் தவிர வேறு யாருமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

● தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, பொதுத்துறை நிறுவனமான ''பால்கோ''வின் 51 சதவீதப் பங்குகளை, 551.5 கோடி ரூபாய்க்கு, ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு விற்றது. 332 கோடி ரூபாய் பெறுமான பங்குகளை, 551 கோடி ரூபாய்க்கு, அதாவது 219 கோடி ரூபாய் இலாபத்தில் விற்றிருப்பதாகத் தம்பட்டமும் அடித்துக் கொண்டது, தே.ஜ.கூ. அரசு. தற்போழுது, இந்த விற்பனையை ஆய்வு செய்த மைய அரசின் கணக்கு-தணிக்கை தலைமை அதிகாரி, பால்கோவின் 51 சதவீதப்பங்குகளை 850 கோடி ரூபாய்க்கு விற்றிருக்க வேண்டும் என்றும், இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் 302 கோடி ரூபாய் என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்த நட்டத்தில் இலாபமடைந்தவர்கள் ஸ்டெர்லைட் முதலாளி மட்டுமல்ல; இந்த விற்பனையின்பொழுது ஏறத்தாழ 100 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக அப்பொழுது காங்கிரசு கட்சி, தே.ஜ.கூ. அரசு மீது குற்றஞ்சுமத்தியது.

● நரசிம்மராவ் ஆட்சியின் பொழுது தொலை தொடர்புத் துறை அமைச்சராக இருந்த சுக்ராம், ஹெச்.எஃப்.சி.எல்., என்ற தனியார் நிறுவனம் தொலை தொடர்பு சேவையில் நுழைவதற்காகக் காட்டிய சலுகைகள் மற்றும் அதிகார முறைகேடுகளின் மூலம் 1,200 கோடி ரூபாய்க்குக் கொள்ளை அடித்தார். இந்த ஊழல் தொடர்பாக, மையப் புலனாய்வுத்துறை இவரது வீட்டைச் சோதனையிட்டபொழுது 3.61 கோடி ரூபாய் கத்தை கத்தையாகக் கைப்பற்றப்பட்டது.

●●●

**ப**ங்குச் சந்தைக் கூடம் என்பது கோட்டு சூட்டு போட்ட மேல்மட்டத்துக் கொள்ளைக்காரர்கள் சந்திக்கும் இடமாகவே மாறிப் போய்விட்டது. காங்கிரசுக்கு அர்சத் மேத்தா என்றால், பா.ஜ.க.விற்கு கேதன் பாரேக். அர்சத் மேத்தா நடத்திய பங்குச் சூதாட்டத்தால், வங்கிகளும், பொதுத்துறை நிறுவனங்களும் அடைந்த நட்டம் 4,100 கோடி ரூபாய்; கேதன் பாரேக் முழுங்கிய பொதுப் பணம் 3,218 கோடி ரூபாய் என அரசாங்கமே ஒத்துக்கொண்டு வழக்குகளை நடத்தி வருகிறது.

● ''ஹோம் ட்ரேட்'' என்ற நிதி நிறுவனம், பங்குச் சந்தையில் சூதாடுவதற்காக குஜராத், மகாராஷ்டிராவைச் சேர்ந்த 17 கூட்டுறவு வங்கிகளை மொட்டையடித்தது. இந்த மோசடியின் மதிப்பு 1200 கோடி ரூபாய்.

● மைய அரசு நிறுவனமான யூனிட் ட்ரஸ்ட ஆஃப் இந்தியா, அம்பானியின் ரிலையன்ஸ் மற்றும் சில தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்குகளைத் தூக்கி நிறுத்துவதற்காக, தன் கையில் இருந்த பொது மக்களின் சேமிப்பை பங்குச் சந்தையில் கொட்டியது. யூனிட் டிரஸ்டு நடத்திய சூதாட்டம் புஸ்வாணமானதால், அந்நிறுவனம் அடைந்த நட்டம் 15,000 கோடி ரூபாய். இந்த நட்டத்தை ஈடுகட்ட அம்பானியின் சொத்து பறிமுதல் செய்யப்படவில்லை; மாறாக, பொதுமக்களின் வரிப்பணத்தில் மைய அரசு கைவைத்து ஈடுகட்டியது.




**ஸ்பிக் நிறுவனம் பங்கு விற்பனை ஊழல் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட ஜெயாவை வாழ்த்தும் அ.தி.மு.க. வழக்கறிஞர்கள்: ஊழல் சமூக ஒழுக்கமாகிப் போனதன் சாட்சி.**

● 1992 தொடங்கி 96-க்குள், நான்கே ஆண்டுகளில் 3,911 பெயர்ப் பலகை நிறுவனங்கள், போலி பங்குகளை வெளியிட்டு சுருட்டிக் கொண்ட தொகை 25,000 கோடி ரூபாய்.

● தாராளமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தேக்கு மரம் வளர்க்கிறோம்; பன்றி வளர்க்கிறோம் என காளானைப் போல முளைத்த நிறுவனங்கள் பங்குச் சந்தையில் புகுந்து அடித்த கொள்ளை 50,000 கோடி ரூபாய்,

● அதிக வட்டி ஆசை காட்டி, பொது மக்களை மொட்டையடித்ததற்காக தமிழகத்தில் மட்டும் 168 நிதி நிறுவனங்கள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு, அவை கோப்புகளில் தூங்குகின்றன. மகாராஷ்டிராவைச் சேர்ந்த சி.ஆர்.பி. என்ற நிதி நிறுவனம், ஒரு இலட்சம் முதலீட்டாளர்களை மோசடி செய்து 1,031 கோடி ரூபாயைச் சுருட்டியது. தமிழகத்தில் ராயப் பேட்டை பெனிபிட் பண்ட், ஆழ்வார் பேட்டை பெனிபிட் பண்ட் என்ற இரு நிறுவனங்கள் மட்டும் அடித்த பகற்கொள்ளை கிட்டதட்ட 1,200 கோடி ரூபாய்.

● பரஸ்பர நிதி நிறுவனங்கள் **(Mutual Funds)** பங்குச் சந்தை சூதாட்டத்தின் மூலம், அரசு வங்கிகளுக்கு ஏற்படுத்திய நட்டம் 15,000 கோடி ரூபாய்.

●●●

**தா**ராளமயத்தின் பின், ''தொழில்'' என்ற முறையில் நடந்த இந்த மோசடிகள் - ஊழல்கள் ஒருபுறமிருக்க, ஓட்டுக் கட்சித் தலைவர்களுக்கும், அதிகார வர்க்கத்துக்கும் தாராளமயம் பொன்முட்டையிடும் வாத்தாகவே அமைந்தது.

நரசிம்ம ராவ் ஆட்சியின் பொழுது நடந்த 133 கோடி ரூபாய் யூரியா இறக்குமதி மோசடி; 500 கோடி ரூபாய் சர்க்கரை விலையேற்றம் - இறக்குமதி ஊழல்; பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளை அடிமாட்டு விலைக்கு விற்றதில் நடந்த 12,000 கோடி ரூபாய் மோசடி மற்றும் பங்குச் சந்தை ஊழல் நாயகன் அர்சத் மேத்தா, நரசிம்ம ராவ் நந்தியால் தொகுதியில் வெற்றி பெறுவதற்காக ஒரு கோடி ரூபாய் தேர்தல் நன்கொடையாகக் கொடுத்த இலஞ்ச



படிப்பகம்

www.padippakam.com

விவகாரம் - என ஊழலில் ஒரு புதிய வரலாறைப் படைத்தது, ராவ் ஆட்சி. அவரது ஐந்தாண்டு கால ஆட்சியில், ப.சிதம்பரம், கல்பனாத்ராய், சங்கரானந்த், சதீஷ் ஷர்மா உள்ளிட்டு 15 அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விசாரணை நடந்தது.

ஊழலில் ராவ் அரசு எட்டடி பாய்ந்தது என்றால், அதன் பின் வந்த வாஜ்பேயி அரசு பதினாறு அடி பாய்கிறது. தொலை தொடர்பு சேவையில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள், தரகு முதலாளிகளின் இலாபத்திற்காக வாஜ்பாயி அரசு அறிவித்த புதிய தொலை தொடர்புக் கொள்கையின் பின்னே 300 கோடி ரூபாய் இலஞ்சம் விளையாடியது.

● ஆர்.எஸ்.எஸ்.காரர்களாகப் பார்த்து பெட்ரோல் விற்பனை உரிமங்களை ஒதுக்கியதில் நடந்த முறைகேடு 2,500 கோடி ரூபாய்.

● ஆயுதத் தளவாட பேரங்களில் நடக்கும் ஊழலை அம்பலப்படுத்திய தெகல்கா டேப்பில், பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைவராக இருந்த பங்காரு லெட்சுமணன் இலஞ்சப் பணத்தோடு சிக்கினார்.

● கார்கில் போரில் 'நாட்டுக்காக உயிர்நீத்த' போர் வீரர்களுக்கு சவப் பெட்டி வாங்கியதில் கூட, இந்து மத வெறிக்கும்பல் கமிசன் அடித்தது; அப்போரைக் காட்டி ஆயுதத் தளவாடங்கள் வாங்கிக் குவித்ததில், பா.ஜ.க. கூட்டணி அரசு, கூட்டுக் கொள்ளையடித்திருப்பதை, தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியே புட்டு வைத்து விட்டார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பு அம்பலமான ''ஹவாலா'' ஊழலில், காங்கிரசின் ராஜீவ் காந்தி, பா.ஜ.க.வின் அத்வானி மற்றும் முன்னாள் பிரதமர் சந்திரசேகர் எனத் 'தேசிய'க் கட்சிகளைச் சேர்ந்த பல பெரும்புள்ளிகளும் மாட்டிக் கொண்ட ''ஊழல் ஒருமைப்பாட்டை''க் கண்டு நாடே சிரித்தது.

இத் 'தேசிய' ஊழல்கள் ஒருபுறமிருக்க மாநில அளவில் நடந்த லல்லுவின் 600 கோடி ரூபாய் கால்நடைத் தீவன ஊழல்; கேரளாவில் நடந்த பாமாயில் இறக்குமதி ஊழல்; மாயாவதியின் தாஜ்மகால் வணிக வளாக ஊழல் மற்றும் ஜெயாவின் ''மெகா'' ஊழல்கள் எனத் தாராளமயம், இந்தியாவை ஊழலை உற்பத்தி செய்து தள்ளும் சாக்கடையாகவே மாற்றிவிட்டது.

●●●

கடந்த பத்தாண்டுகளில் பல இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல்கள் நடந்துள்ள போதிலும் இந்த ஊழல் குற்றங்களுக்காக ஒருவரும் தண்டிக்கப்படவில்லை.

தொலைபேசித் துறையில் நடந்த ஊழலில் சிக்கிக் கொண்ட சுக்ராம் மீது நடந்து வரும் 4 வழக்குகளில், ஒரு வழக்கில் சுக்ராம் தண்டிக்கப்பட்டாலும், நீதிமன்றம் அவரைச் சிறைக்கு அனுப்பாமல், மேல் முறையீடு செய்ய அனுமதித்துவிட்டது.

தமிழ்நாட்டையே மொட்டையடித்த ஜெயா - சசி கும்பல் மீது 48 கிரிமினல் வழக்குகள் தொடுக்கப்பட்ட போதிலும், அவர் சட்டப்படியே ஒவ்வொரு வழக்கில் இருந்தும் விடுதலையாகி வருகிறார். ஜெயா, ஹவாலா கடத்தல் மூலம் பெற்ற மூன்று இலட்சம் அமெரிக்க டாலர் வழக்கை, தனது சாதி மற்றும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, மைய அரசு விசாரிக்காமல் முடக்கியே போட்டு விட்டார்.

ஹவாலா வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சரத் யாதவ், சுந்தர்லால் பட்வா, கைலாஷ் ஜோஷி ஆகியோர், ''நாங்கள் கட்சி நிதிக்காகத் தான் பணம் வாங்கினோம்'' என வெளிப்படையாகவே ஒப்புக் கொண்ட பின்னரும், ''அந்த ஊழல் வழக்கை நிரூபிக்க போதிய ஆதாரமில்லை'' எனக் கூறி, உச்சநீதி மன்றம் ஓட்டுக் கட்சி தலைவர்களை விடுதலை செய்துவிட்டது. மேலும், ''டான்சி'' வழக்கில் இருந்து ஜெயா-சசி கும்பலை விடுதலை செய்ததன் மூலம், ஓட்டுக்கட்சித் தலைவர்களும், அதிகார வர்க்கமும் அரசு நிறுவனங்களையும், சொத்துக்களையும் விழுங்குவதற்கு புதிய பாதையினைப் போட்டுக் கொடுத்திருக்கிறது. தரகு முதலாளிகள் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் நடத்திவரும் அந்நியச் செலவாணி மோசடிகளைச் சட்டபூர்வமாக்குவதற்காக, அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் தற்பொழுது திருத்தப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், அதிகாரத்தின் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் இலஞ்சம் - ஊழல் - மோசடி - அதிகாரமுறை கேடுகளின் மூலம் பணத்தைக் குவிப்பதை ஒழுக்கக் கேடான விசயமாகப் பார்ப்பதில்லை. முன்னாள் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா, ''பணம் சம்பாதிப்பது ஒன்றும் பாவமல்ல'' என்றார். பிரதமர் வாஜ்பாயி இன்னும் ஒருபடி மேலே போய் இலஞ்சத்தை, ''எளிதாகக் காரியத்தை முடித்துக் கொடுப்பதற்கான கட்டணம்'' என வருணித்தார். ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு ஆளானவர்கள், தார்மீகப் பொறுப்பேற்று, தாமாகப் பதவி விலகக் கூட தற்பொழுது முன்வருவதில்லை.

''ஊழலை ஒழிக்க முடியாது'' என்ற மனோநிலைதான் இதற்குமுன் பொது மக்களிடம் உருவாக்கப்பட்டிருந்தது. தாராளமயமோ, ''திறமையிருந்தால் நீயும் சம்பாதித்துக் கொள்'' என்ற புதிய பண்பாட்டை, பொது மக்களிடம் நுகர்வுக் கலாச்சாரம் மூலம் திணிக்கிறது.

இந்தக் கேடுகெட்ட பண்பாட்டை யாராவது எதிர்க்கத் துணிந்தால், அவர்களின் உயிருக்கே உத்தரவாதம் இல்லை என்ற நிலையும் உருவாகி வருகிறது. மைய அரசின் நெடுஞ்சாலைத் துறையில் அதிகாரியாகப் பணியாற்றிய சத்யேந்தர் குமார் துபே; 75,000 கோடி ரூபாய் பெறுமான தங்க நாற்கரண சாலை திட்டத்தில் நடந்து வரும் ஊழலை எதிர்த்ததால், சமீபத்தில் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை, பிரதமர் அலுவலகத்துக்குத் தெரிந்தே நடந்திருக்கிறது என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

தாராளமயம் திணிக்கும் இப்பண்பட்டால், இப்பொழுது, ஓட்டுகட்சித் தலைவர்கள் ஏழை போல நடிப்பது கூட இல்லை. இலஞ்சம் - ஊழலின் மூலம் குவிக்கும் பணத்தைக் கொண்டு, பண்ணை வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள்; காபி - டீ எஸ்டேட்டுகளை வளைத்துப் போடுகிறார்கள். கல்வி வியாபாரம் உள்ளிட்டு பல்வேறு தொழில்களில் முதலீடு செய்கிறார்கள். அவர்களது வாழ்க்கைமுறை ஒரு முதலாளித்துவ நிறுவனத்தின் தலைமை நிர்வாகியின் வாழ்க்கை போல மாறி விட்டது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையேனும் மக்களைச் சந்திக்க வேண்டிய ஓட்டுக்கட்சித் தலைவர்களே தாராளமயத்தின் பின் இப்படி மாறிவிட்ட பிறகு, அதிகார வர்க்கமும், தரகு முதலாளிகளும் பொதுச் சொத்தைச் சூறையாடுவதற்கும், மகாராஜாக்களைப் போல சொகுசு வாழ்க்கை நடத்துவதற்கும் தடையேதும் இருக்குமா?

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# வேலை தேடும் இளைஞர்கள் மீது போலீசு தடியடி

# சிந்திய இரத்தம் வீணாகலாமா?

"இந்திய ரயில்வே துறையில் ஆளெடுப்பு", "இந்திய இராணுவத்திற்கு ஆளெடுப்பு" என்று அரசாங்க வேலை கொடுப்பதாக ஆசைகாட்டி கூப்பிட்டு, வேலை கேட்பவர்களின் மண்டையை பிளந்து அனுப்புகிறது, இந்திய அரசு!

கடந்த ஜனவரி மாதம் 5-ஆம் தேதி முதல் 9-ஆம் தேதிவரை தமிழகத்தின் கடலூர் நகரில் இராணுவத்திற்கு ஆளெடுப்பதாக அறிவித்தது, இந்திய இராணுவம்.

'சி', 'டி' என்று தரம் பிரிக்கப்பட்ட மூன்று மற்றும் நான்காம் நிலை வேலைகளுக்குத்தான் இந்த ஆளெடுப்பு. சவரம் செய்வது, சலவை செய்வது, பெயிண்ட் அடிப்பது போன்ற வேலைகளுக்கு ஐந்தாம் வகுப்பு படித்தவர்களும், உதவியாளர்கள் வேலைக்கு +2 படித்தவர்களும் தேவை என விளம்பரம் செய்தனர்.

இந்தத் தேர்வில் கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய 7 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்தவர்களும் மட்டுமே கலந்து கொள்ளலாம் என்று அறிவித்தனர்.

5-ஆம் தேதி தேர்வுக்கு 4-ஆம் தேதியே, பத்தாயிரக்கணக்கான இளைஞர்கள் கடலூரை முற்றுகையிட்டனர்; கடலூரே அல்லோகலப்பட்டது. பல இளைஞர்கள், கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் இரவு சாலையோரங்களில் தூங்கினர். விடியற்காலை 4 மணிக்கே, ஆளெடுக்கும் இடமான, அண்ணா அரங்கின் அருகே குவிந்தனர். காலை 8 மணியளவில், தேர்வு ஆரம்பமானவுடன் சுமார் 20 ஆயிரம் பேர் அரங்கத்தினுள் நுழைந்தனர்; பலவீனமாக இருந்த அரங்கத்தின் சுற்று சுவர் 15 அடி தூரத்திற்கு இடிந்து விழுந்தது. இதனால், அங்கிருந்த போலீசுக்காரர்களும் இளைஞர்களும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர்; காவலில் இருந்த போலீசு ஆய்வாளர் சேகர் என்பவருக்கு ஏற்கெனவே கட்டுப் போட்டிருந்த காலில் மேலும் அடிபட்டது; அவ்வளவுதான்! இளைஞர்கள், போலீசு கும்பலை தாக்கி மிதித்து விட்டதாகப் புரளிகிளப்பி, இளைஞர்களை நரவேட்டையாடியது போலீசு.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சுற்றிவளைத்து தாக்கப்பட்டனர். செருப்புகளையும் 'பைகளை'யும் படிப்புச் சான்றிதழ்களையும் விட்டு விட்டு சிதறியோடியவர்களை இழுத்து, காலில் போட்டு மிதித்து மண்டையைப் பிளந்தது, போலீசு.

சிறிது நேரத்தில் அவ்விடமே யுத்தம் முடிந்த போர்க்களம் போல் காட்சியளித்தது. "வேலையத்த பொறம்போக்கு நாய்களா... ஒரு அப்பனுக்கு பொறந்தவனுங்க எல்லாம் இங்கிருந்து ஓடிடுங்க. பல அப்பனுக்குப் பொறந்தவனுங்க மட்டும் இங்க இருங்க" என்று போலீசு எக்காளமிட்டது. தேர்வு நடத்துவதாக 5 நாட்கள் இவ்வாறு அட்டகாசம் செய்து, ஒவ்வொரு பிரிவுக்கும் 400 பேர்களை மட்டுமே தெரிவு செய்தனர், இராணுவ அதிகாரிகள்.

வேலைக்கு, குறைந்த கல்வி தகுதி 5-ஆம் வகுப்பு என்று விளம்பரம் செய்துவிட்டு, எட்டாம் வகுப்பு படித்தவர்களை மட்டுமே தேர்வுக்கு உள்ளே விட்டனர். தினமும் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தேர்வு என்று அறிவித்திருந்திருந்தால், இந்த அமளியை தவிர்த்திருக்கலாம்; இந்த சாதாரண அறிவு கூட இல்லாத கும்பல் தான், அறிவுத் தேர்வு நடத்தியது!

இதே அக்கிரமங்களை இரண்டு மாதத்திற்கு முன்பு அசாம் மாநில தலைநகர் கவுகாத்தியில் நடத்தியது, இந்திய ரயில்வே நிர்வாகம்.

கடந்த நவம்பர் மாதம் முதல் வாரத்தில், வடகிழக்கு ரயில்வே பிராந்தியம் சார்பாக, வேலைக்கு ஆட்கள் எடுக்கப் போவதாக அறிவிப்பு வெளியானது.

'கேங்க்மேன்', 'ட்ரேக்மேன்' என்று சொல்லக்கூடிய 'கலாசி' வேலைகளுக்கு, 10-ஆம் வகுப்பு படித்தவர்கள், 'டி' பிரிவில் மாதம் 1200 ரூபாய் சம்பளத்திற்கு 2,575 நபர்களும், ரயில்வே நிலைய உதவி அதிகாரி போன்ற வேலைகளுக்கு 'சி' பிரிவில், பட்டதாரிகள் 145 நபர்களும் தேவை என்று விளம்பரம் வெளியானது. இதற்கு அகில இந்திய தேர்வு வேறு! இவ்வேலைக்கு 7 லட்சம் விண்ணப்பங்கள் குவிந்தன. இந்திபேசும் மாநிலங்களிலிருந்து, குறிப்பாக பீகார் மாநிலத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் கவுகாத்தி நோக்கி குவிந்தனர். அந்நியர்களுக்கு அசாம் மாநிலத்தில் வேலையில்லை என்று கலவரம் வெடித்தது.

"மண்ணின் மைந்தர்"களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டும் என்று, பிழைக்க சென்ற பீகார் மக்களை உயிரோடு அசாமிய இனவெறியர்கள் கொளுத்தினார்கள்; 56 பேர் கொல்லப்பட்டனர். எங்கு திரும்பினாலும் வன்முறை; ஊரடங்கு உத்தரவு என்று

**இராணுவத்தில் சேருவதற்காக, கடலூர் அண்ணா விளையாட்டுத் திடலில் காத்துக் கிடந்த வேலையில்லா இளைஞர் பட்டாளம்.**





படிப்பகம்

www.padippakam.com

அசாம் மாநிலமே ஸ்தம்பித்து போனது. அசாமிய இனவெறியை எதிர்த்து, பீகாரிலும் கலவரம் வெடித்தது. அசாமிலிருந்து வந்த ரயில்கள் நிறுத்தப்பட்டு, பயணிகள் ஓடஓட வெட்டப்பட்டனர். கடைசியில், ஓட்டுப் பொறுக்கி கட்சி தலைவர்கள் சமாதான தூதர்களாக வேடமிட்டு அமைதி காக்கும்படி மக்களிடம் முதலைக் கண்ணீர் சிந்தினர்.

இதேநாளில், சிவசேனா கட்சியும் மகாராஷ்டிர மாநிலத்தில் கலவரத்தை கட்டவிழ்த்து விட்டது. மத்திய பிராந்திய ரயில்வே, வேலை வாய்ப்பு மற்றும் ஆளெடுப்பு விளம்பரங்களை மராத்திய மொழி தினசரிகளில் வெளியிடவில்லையென்று வன்முறையில் இறங்கியது சிவசேனா. அங்கும் பீகார் மாநிலத்து மக்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டனர். காரணம், மத்திய ரயில்வே அமைச்சர் நிதிஷ்குமார் பீகார் மாநிலத்துக்காரர் என்பதுதான்!

''இந்தியா ஒளிர்கிறது'', 'இவ்வளவு சந்தோஷம் வாழ்க்கையில் எப்போதுமே கிடைத்தது இல்லை, இந்தியர்களுக்கு!' என்று இந்தியர்களின் ரத்தத்திலேயே எழுதி, தினசரி விளம்பரங்களாக்கி குதூகலிக்கிறார்கள், பார்ப்பன பயங்கரவாதிகள்!

உழைக்கும் மக்கள் சுயகாலில் நின்று விடக்கூடாது என்பதற்காக, அடிமட்ட வேலைவாய்ப்புகள் உள்ள அனைத்து இடங்களும் பார்ப்பன பயங்கரவாதிகளால் இழுத்து மூடப்படுகிறது. குறிப்பாக, உலகத்தின் மிகப்பெரும் ரயில்வே என்று போற்றப்படும் இந்திய ரயில்வே துறை இப்போது தவணை முறையில் விற்கப்படுகிறது. மொத்தம் 19 லட்சமாக இருந்த அதன் ஊழியர்களின் எண்ணிக்கை 15 லட்சமாக குறைக்கப்படுகிறது.

இந்திய அரசுக் கணக்குப்படி 4 கோடிபேர் வேலையற்றோர் பட்டியலில் இருக்கிறார்கள். அதில், ஆண்டுக்கு 10 லட்சம் பேர் கூடிக் கொண்டிருக்கிறார்கள்.

வேலை செய்வோர் பட்டியலில் இருப்பவர்களில் வெறும் 8 சதம் பேர் மட்டுமே, அமைப்பாக்கப்பட்ட தொழிலாளர்கள். மீதி 92 சதம் பேர் முறைசாரா தொழில் செய்பவர்கள். இதில் 60 சதம் பேர் சுய தொழில் செய்பவர்கள். இவைதான், அரசாங்கம் வேலையற்றவர்களின் புள்ளி விபரங்களைக் குறைக்கும் லட்சணம்.



சிதறுண்டு கிடக்கும் காலணிகள் – போலீசு தடியடியின் கோரம்: வேலை தேடி வந்த இளைஞர்களுக்கு பாசிச ஜெயா அரசு தந்த வெகுமதி.

ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்புளை உருவாக்குவதாக, தினமும் பல வண்ண விளம்பரங்ளை வெளியிடுகிறது, பி.ஜே.பி அரசு. இது எப்படி என்று கணக்கு சொல்கிறது, பார்ப்பன பயங்கரவாதிகளின் ஊதுகுழலான 'இந்தியா டுடே' பத்திரிக்கை.

டில்லி, மும்பை போன்ற பெருநகரங்களில் குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒரு கேளிக்கை விடுதி திறக்கப்படுகிறது. அதில் குறைந்தது ஒரு டஜன்பேர் வேலை பெறுகிறார்கள், மேலும், 2003-04- ஆம் ஆண்டுகளில் 8.7 லட்சம் புதிய கார்கள் விற்று தீர்ந்துள்ளன; அதில் 30 சதம் பேர், பணிக்கு ஓட்டுநர்களை வைத்துள்ளதாக ஒரு புள்ளிவிபரம் சொல்கிறது. இதன்படி 2.6 லட்சம் ஓட்டுநர்களுக்கு வேலை கிடைத்துள்ளது. மேலும், அரசாங்கம் போடும் ஒவ்வொரு கிலோமீட்டர் சாலைக்கும். 40 பேர்களுக்கு வேலை கிடைக்கிறது.. அதன்படி, வாஜ்பாய் அரசு புதிதாக நெடுஞ்சாலை போட்டு வரும் திட்டத்தால் பல லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று வேலைவாய்ப்பு பெற்றவர்களின் பட்டியலை இப்படி நீட்டிக் கொண்டே போகிறது, அப்பத்திரிக்கை. சாராய கடைகளில் 'எச்சில் கிளாஸ்' கழுவுவதையும், விபச்சார விடுதிகளில் கதவு திறந்துவிடும் வேலையையும் உழைக்கும் மக்களுக்கு ஒதுக்கியிருப்பதை பார்ப்பன பயங்கரவாதிகள் எவ்வளவு திமிருடன் கூறுகிறார்கள், பாருங்கள்!

மனு தர்மத்தின்படி மலம் சுமக்கும் வேலைக்கு இன்னார், சவரம் செய்யும் வேலைக்கு இன்னார், சாக்கடை சுத்தம் செய்வதற்கு இன்னார், சாராயக்கடை வேலைக்கு இன்னார், ஆனால் ஆட்சி செய்யும் வேலைக்கு மட்டுமே பார்ப்பனர் என்கிறார்கள். இதை மீறி அரசாங்கம் மற்றும் அரசு எந்திரத்திற்குள்ளே நுழைய முயற்சித்தால் மண்டையை பிளக்கிறார்கள்!

இதுநாள் வரையில் தனியார் முதலாளிகள் சட்டவிரோதமாகக் கடைபிடித்த அடக்குமுறைகள் அனைத்தையும், தாராளமய புதிய பொருளாதார கொள்கையின் பெயரால் சட்டப்பூர்வமாக்கி விட்டனர், பார்ப்பன பயங்கரவாதிகள்.

பயங்கரவாதிகள் என்ற பெயரில் போராளிகளைச் சுட்டுக் கொல்வதுபோல், வேலைகோரும் உழைக்கும் மக்களை 'தெருப் பொறுக்கி'கள் என்று கொன்றொழிக்கும் போக்கு தொடங்கி விட்டது. ஏற்கெனவே, தாராளமயம் தலைவிரித்தாடும் அர்ஜென்டினா, பிரேசில் போன்ற நாடுகளில் உழைக்கும் மக்களையும் அனாதைக் குழந்தைகளையும் இப்படி சுட்டுக் கொல்வது சர்வ சாதாரணமாகி விட்டது!

வேலையற்ற இளைஞர்கள் இனியும் அரசாங்க வேலை கிடைக்கும் என்ற கனவுகளில் மிதந்தால் அவர்கள் கரைகாண முடியாத அரசின் அடக்குமுறைக் கடலில்தான் மூழ்க வேண்டும். எனவே, உலகமயம் - தாராளமயக் கொள்கையின் பெயரால் நாட்டையே ஏகாதிபத்தியங்களுக்கு விற்றுவரும் பார்ப்பன பயங்கரவாதிகளை அழிக்காமல் வேலை பெறுவது சாத்தியமல்ல என்ற அரசியல் அரிச்சுவடியை இளைஞர்கள் உணர வேண்டும்.

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com

# உலக சமூக மன்ற (WSF) மாநாடு:

# ஏகாதிபத்திய கைக்கூலிகளின் கும்பமேளா!

மும்பையில் நடைபெற்ற உலக சமூக மன்றத்தின் மாநாட்டையும், அந்த மன்றத்தையும் எப்படி மதிப்பிடுவது? மேதா பட்கர், வந்தனா சிவா, அருந்ததி ராய், பிரபாத் பட்நாயக் போன்ற அறிவுத்துறையினரின் ஆய்வறிக்கைகளையும், வீர உரைகளையும் பத்திரிகைகளில் மட்டுமே படித்த வாசகர்கள், உலக சமூக மன்றத்தை ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தளம் என்று எண்ணி மயங்கக்கூடும். அவை முழங்கப்பட்ட களத்தை உங்களுக்கு இங்கே காணத் தருகிறோம். வந்தனா சிவாவின் கூற்றுப்படியே கூட, இது ஒரு கும்பமேளா. இந்தக் கும்பமேளாவை வழங்கியது பார்ப்பனியமல்ல, ஏகாதிபத்தியம்!

வணிகர் சங்க வர்த்தகப் பொருட்காட்சிகளையும், கிஷ்கிந்தா, பிளாக் தண்டர்களின் உல்லாச ஆரவாரங்களையும், நட்சத்திர இரவு நடன விடுதிகளுக்கான கிளுகிளுப்பையும் பலர் தனித்தனியே கண்டிருக்கலாம். அனுபவித்திருக்கலாம். ஆனால், இவையனைத்தையும் ஒருசேர வாரி வழங்கிய பெருமைக்குரியது மும்பையில் நடந்து முடிந்த உலக சமூக மன்றத்தின் **(WSF)** நான்காவது சர்வதேச மாநாடு.

தொடங்குவதற்கு ஒரு மாதம் முன்பாகவே தீபாவளித் திருநாள் புதுப் பட ரிலீஸ் போல விளம்பரங்களும், வர்ணனைகளும் வெளிவந்து கொண்டிருந்தன. உலக சமூக மன்றத்தின் இணைய தளத்தில் பிளாக் டிக்கட் விற்பனை போல தங்குமிடம், உணவு, போக்குவரத்து ஆகியவற்றுக்கான புக்கிங் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. அதிகாரபூர்வ தங்குமிட விளம்பரதாரர், அதிகாரபூர்வ போக்குவரத்து விளம்பரதாரர், இன்ன பிற... ஆனால் அதிகாரபூர்வ ஆணுறை விளம்பரதாரர் மட்டும் அறிவிக்கப்படவேயில்லை. என்ன இருந்தாலும் மக்களின் 'ஜனநாயக' உரிமைக்கான தளம் அல்லவா? மொத்தத்தில் உலகமயத்திற்கெதிரான இம்மாநாட்டில் லட்சக்கணக்கான மக்கள் பல்வேறு நாடுகளிலிருந்து கூடவிருப்பதாகவும், மும்பை ஒரு வாரத்திற்கு குலுங்கப் போவதாகவும் ஊடக அசரீரிகள் வானளாவ முரசறைந்தன. ஆனால் குலுங்கியது யார், குப்புற விழுந்தவர்கள் யார் என்பதை கட்டுரையின் இறுதியில் வாசகர்கள் முடிவு செய்து கொள்ளட்டுமே! ***(உ.ச.ம. பாணிதான்! யார் முடிவையும் யார் மேலேயும் திணிக்கக் கூடாதுல்ல...!)***

இந்த மகா உ.ச.ம. மேளாவை 'அம்பலப்படுத்தி' அதற்கு 'இணையாக' (தெளிவாகப் புரிந்து கொள்ளவும் - எதிராக அல்ல, அல்ல, அல்லவே அல்ல–சத்தியம் செய்து கொடுத்தவர்கள் 'மும்பை எதிர்ப்பியக்கம் - 2004' **(MR 2004)**. உ.ச.ம. நடந்தேறிய தெஸ்கான் மைதானத்திற்கு 'எதிராக' உள்ள கால்நடைக் கல்லூரி மைதானத்தில் இவர்களது மாநாடு நடைபெற்றது. ஒரு பக்கம் 'உலகமய எதிர்ப்பு'; இன்னொரு பக்கம் 'ஏகாதிபத்திய உலகமய எதிர்ப்பு'!

இடையில் ஒரு குரல் உரத்து எழுந்தது. அதுதான் உ.ச.ம. எதிர்ப்பு! இந்தக் குரலுக்கு சொந்தக்காரர்கள் முக்காலும் உணர்ந்த மெத்தப் படித்த அறிவுஜீவிகள் அல்ல, புரட்சிகர அரசியலை பிரச்சாரம் செய்ய வந்த 'சாதாரண' அணிகள்! இவர்களிடம் அந்தப் பரந்து விரிந்த கோரேகாவ் ரோட்டில் எந்தத் 'தளமுமில்லை', 'கொத்தளமுமில்லை; கையிலிருந்த 'உ.ச.ம. எதிர்ப்பு' வெளியீடுகளும், அரசியல் உறுதியும், ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த திருவிழாக் கூட்டத்திற்கு எதிரே வெறுமனே 20 தோழர்கள் அடங்கிய குழுவும்தான்!

''WSF (உ.ச.ம) எதிர்ப்பு'' என்ற உ.ச.ம.வை அம்பலப்படுத்தும் கேலிச் சித்திரங்கள் அடங்கிய சிறு வெளியீட்டை, அந்த 20 ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. தோழர்களும் உ.ச.ம திருவிழாவில் பங்கேற்ற வெளிநாட்டு, உள்நாட்டு பிரதிநிதிகளிடம் விவாதித்து விநியோகம் செய்யத் தொடங்கினர். பொறிகள் சற்றே பறக்கத் தொடங்கின.

உ.ச.ம. என்ற இந்த உல்லாச - ஊதாரி - உலகமய எதிர்ப்பு பொருட்காட்சி 136 கருத்தரங்குகளை ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் ஐந்து நாட்களிலும் நடத்தியது. மாற்றுப் பொருளாதாரம், தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகள், பெண்ணியப் பிரச்சினைகள், தலித்துகள் மீதான வன்கொடுமை, பொருளாதார ஆய்வுகள், பாலியல் தொழிலாளர் சிக்கல்கள்,

**இந்தப் பெண்களின் உடையலங்காரத்தைப் பார்க்கும்பொழுது அழகிப் போட்டி நினைவுக்கு வருகிறது. ஆனால், இவர்கள்தான் உ.ச.ம. தயாரித்து வழங்கும் ''ஏகாதிபத்திய எதிர்ப்பு வீராங்கனைகள்.''**







படிப்பகம்

www.padippakam.com




**உ.ச.ம. மாநாட்டில் கலந்து கொள்ள வருகிறது 'மார்க்சிஸ்டு' கட்சியின் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்: ஏகாதிபத்தியத்தின் ''சிவப்பு செக்யூரிட்டிகள்''.**

ஓரினச் சேர்க்கையாளர்களுக்கான பிரச்சினைகள், அரவாணிகளின் சிக்கல்கள்... என பல்வேறு கருத்தரங்கங்கள்!

ஆயிரக்கணக்கானோர் அமருவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தும், பெருவாரியான இருக்கைகள் காலியாக இருந்தது. கருத்தரங்குகளுக்கான அமோக ஆதரவைப் பறைசாற்றியது. சில கருத்தரங்குகள் குறிப்பான சில அமைப்புகளால் வழங்கப்பட்டிருந்தன **(Sponsored).** ஒருவருடைய பிரச்சினை மற்றவருடையதிலிருந்து வேறுபட்டது, அவரவர் பிரச்சினைகளை ஆழமாக விவாதிப்பது, பிரச்சினைகளை இணைத்து முழுமைப்படுத்தும் 'ஒட்டுமொத்தப் பார்வையை' நிராகரிப்பது என்ற அடிப்படையில் கருத்தரங்குகள் ''என் பெரச்சனதான், எனக்கு மட்டுந்தான்'' முறையில் நடத்தப்பட்டாலும், கரங்கள் என்னவோ கைகுலுக்கிக் கொள்ளத்தான் செய்தன.

உதாரணமாக, 'பத்திரிக்கையாளர் சந்திப்பு அறையை' பாலியல் தொழிலாளர் அமைப்பு வழங்கியதிலிருந்து, தொழில் ரீதியிலான ஒற்றுமையை நம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. கொளப்பாக்கத்து ஜெயலலிதா நேர்காணலில், அ.தி.மு.க. அண்ணன்கள் ஆள்வைத்து கோஷம் போட்டு பலம் காட்டியதைப் போல, உ.ச.ம. குருமார்களிடம் தன்னார்வக் குழுக்கள் கூட்டத்தைத் திரட்டி வந்து, கருத்தரங்கு நடத்தி, ரிப்போர்ட் கொடுத்து தலையைச் சொறிந்தார்கள். பலர் கல்லா கட்டியிருப்பார்கள் என நம்புவோமாக; ஆமென்!

உள்ளே நடந்த கருத்தரங்கக் கச்சேரிகளின் சோக நாதத்திற்கு மாறாக, வெளி வளாகங்களில் உற்சாக வெள்ளம் கரைபுரண்டோடியது. 'உலகமய எதிர்ப்பு சக்திகள்' கூடும் இடமல்லவா...? உள்ளூர் பொருட்காட்சிகளில் ரஜினிகாந்த், கமல், கலைஞர் கட்-அவுட்களுக்கு அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்ட தமிழ் நாட்டு குலக்கொழுந்துகள், இங்கே பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்களோடு புகைப்படம் எடுத்துக் கொள்ள அங்குமிங்கும் பாய்ந்தோடியதைப் பார்த்த பொழுது, அவர்களின் போர்க்குணத்தைக் கண்டு நமக்குப் புல்லரித்தது.

ஒருபுறம் புத்த பிட்சுக்களின் மௌன ஊர்வலம், இன்னொருபுறம் மெழுகுவர்த்தி ஊர்வலம், மற்றொருபுறம் ஆதிவாசிகள் ஊர்வலம், இன்னொருபுறம் கம்யூனிஸ்டு ஊர்வலம், டைஃபி **(DYFI)** சிங்கங்களின் சோசலிச முழக்கம், இன்னொருபுறம் எய்ட்ஸ் விழிப்புணர்ச்சிக்கான 'ஃப்ரீ செக்ஸ்' முழக்கம்; ஒருபுறம் அரவாணிகள் ஆரவாரம், இன்னொருபுறம் மலேசிய அழகிகளின் அலங்கார பவனி, ஒரு பக்கம் நாடகம், இன்னொரு பக்கம் பாடல்கள்.... அடாடாடா, கும்பமேளாவில் கஞ்சாப் போதையில் ஆன்மீகம் வெடித்துக் கிளம்பி ஆடியதைப் போல, கோரேகாவில் உ.ச.ம. போதையில் உலகமய எதிர்ப்பு ஆர்ப்பரித்து குதித்துக் கொண்டிருந்தது.

ஆனால், உலகமயத்தினால் தங்கள் வாழ்வையும் வளத்தையும் இழந்து, இன்று அரசு சாரா நிறுவனங்களின் **(NGOs)** பின்னால் காட்சிப் பொருட்களாய் அங்குமிங்கும் பிராணிகளைப் போல அழைத்து செல்லப்படும் அந்த உண்மையான பாதிக்கப்பட்ட மக்கள் மட்டும் திருவிழாக் கேளிக்கைகளில் பங்கு கொள்ளாமல், கூட்டத்தில்

## ஏகாதிபத்திய சேவையில் சிவப்பு செக்யூரிட்டிகள்!

**'உ.ச.ம. (WSF) மண்குதிரை' என்ற தலைப்பிட்ட, உலக சமூக மன்றத்தைஅம்பலப்படுத்தும் துண்டறிக்கையை விநியோகித்துக் கொண்டிருந்த தோழர் ஒருவரை, சிவக்குமார் என்ற சி.பி.எம். நபர் தடுத்திருக்கிறார். கையிலிருந்த 20 துண்டறிக்கைகளைப் பிடுங்கிக் கிழித்துப் போட்டதுடன், தோழரை பிடித்துக் கொண்டு யாரிடம் புகார் செய்வது என்று புரியாமல் அலைந்தார். வாதாடிய தோழரை ஆங்கிலத்தில் திட்டியவாறே திரிந்த அந்த நபர், பிறகு அலைய மனமின்றி, ''இங்க நோட்டீஸ் கொடுக்கக் கூடாது, போடா வெளியே!'' என தமிழில் வாய்மொழிந்திருக்கிறார்.**

**அவருடைய சட்டையைப் பிடித்துக் கொண்ட தோழர், ''தமிழ்தான் தெரியும்ல, இப்ப சொல்லு, இதுல என்ன தப்பு'' எனக் கேட்க, அந்த வீரப் பெருச்சாளி கையை உதறிவிட்டு, தோழர் கையிலிருந்த நோட்டீசைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டது. பின்னர் உ.ச.ம. அரங்கிலிருந்த அறிவிப்பு ஒலிவாங்கியின் மூலமாக நாம் அறிவிப்பு செய்தும், அந்த சிவப்பு செக்யூரிட்டி தைரியத்தோடு எதிர்நோக்க முன்வரவில்லை. அதே போன்று, இந்திய மாணவர் சங்க (SFI) தமிழ் மாநிலப் பொறுப்பாளர் லெனின், நமது தோழர்களைத் தடுக்க முயன்றதும், பின்னர் அவருடன் வந்தவர்களே நம் வெளியீடுகளை வாங்கிச் செல்ல, அவர் மூக்கறுபட்டதும் இன்னொரு கிளைக் கதை. வெளியீடு விற்ற தோழர்களிடம் நீங்கள் சி.ஐ.ஏ.காரர்கள், பி.ஜே.பி.காரர்கள் என்று அவதூறு கூறிவிட்டு, விவாதத்திற்கு தயாரில்லாமல் ஓடிய 'சிவப்பு போராளிகள்' ஏராளம். உ.ச.ம. தொண்டர்கள், போலீசுகாரர்கள் இவர்களையெல்லாம் காட்டிலும் விசுவாசமாக உ.ச.ம.-க்கு சேவை செய்த சிவப்பு செக்யூரிட்டிகளின் பணி நிச்சயமாக அளப்பரியது. உண்மையில் இந்த உ.ச.ம. சேவை சி.பி.எம்-மின் பரிணாம வளர்ச்சியும் கூட. போயஸ் கார்டனிலிருந்து உ.ச.ம. வரைக்கும் பல்லக்குத் தூக்கிகள்தானே சி.பி.எம். அணிகள்! தலைமை என்னவோ சண்டபிரசண்டம்தான்!**


படிப்பகம்

www.padippakam.com



உ.ச.ம. மாநாட்டிற்கு வந்த தென் ஆப்பிரிக்கப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த அந்நாட்டு ''நீதிபதி'' சிரீராஜ்-தின் தேசாய்.

தோழர்கள், ஒவ்வொருவரையும் அணுகி உ.ச.ம. குறித்து விளக்கி வெளியீடுகளை விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பேருந்தில் அமர்ந்திருந்த பள்ளித் தலைமையாசிரியரொருவர், வெளியீடு விற்றுக் கொண்டிருந்த நம் தோழர் ஒருவரை அழைத்து, ''என் குரூப்ல உள்ளவங்க உள்ள போயிருக்காங்க. என் பையன் பெல்ட்ட போட்டுட்டேன். இப்ப அவிழ்க்க முடியல்ல; கொஞ்சம் இந்த பெல்ட்ட அவுத்து விடுறீங்களா?'' என பரிதாபமாகக் கேட்டிருக்கிறார். பெல்ட்டை அவிழ்க்க உதவி செய்த நம் தோழர், ''எதற்கு உ.ச.ம.வுக்கு வந்தீர்கள்?'' எனக் கேட்க, ''உலக சமாதானம்னு சொல்லி கூட்டிகிட்டு வந்தாங்க'' என போட்டாரம் ஒரு போடு! பிறகு நம் தோழர் விளக்கியவுடன், 'ஆமாமா; சரிதான் நீங்க சொல்றது' என்றாராம். 'உலக சமூக மன்றத்தை (WSF) எதிர்த்து' என்ற ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. வெளியீடும், அதனை ஏந்தி விளக்கப் பிரச்சாரம் செய்த தோழர்களும் அந்தத் தலைமையாசிரியருக்கு மட்டுமல்ல; உ.ச.ம.வில் பங்கேற்ற பலருடைய மூளையை இறுக்கிக் கட்டியிருந்த உ.ச.ம. எனும் ஏகாதிபத்திய தொலைந்து போய் விடக் கூடாதென்ற பயத்திலும், தங்களால் வாங்க முடியாத உணவுப் பண்டங்களைப் பார்த்த விரக்தியிலும், புகைப்படமெடுக்கும் வெளிநாட்டவரைப் பற்றி உள்ளெழும்பும் கசப்பிலும் ஆங்காங்கே சேரிகளாய் தனித்து ஒதுங்கியிருந்தனர். பாவம், அவர்களுக்கு 'இன்னொரு உலகம் சாத்தியம்' என்பதிலும், அதனைச் சாதிக்க கேளிக்கை ஊர்வலங்களும் ஆரவாரக் கூத்துக்களும் அவசியம் என்பதிலும் நம்பிக்கை ஏற்படவில்லை போலும்! பொருட்காட்சிக்கு, சீமாட்டியின் குழந்தையைத் தோளில் சுமக்க உடன் செல்லும் வேலைக்காரச் சிறுமிகளைப் போல அவர்கள் இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இலவச பொதுக்குழாய்கள் இருந்தும் ''ஜீரோ-பி'' (Zero-B)கடை போட்டு தண்ணீர் விற்றது, ஏகாதிபத்தியக் கட்டமைப்பிற்குள்ளேயே மக்களுக்கான பங்கேற்புப் பொருளாதாரம் சாத்தியமென்பதை சுட்டிக்காட்டியது. ஆனால், 'பங்கேற்புப் பொருளாதாரத்தை' சாதித்தும், உ.ச.ம.வில் முதன்மை சக்தியாகவும் திகழும் பிரேசில் தொழிலாளர் கட்சி, உலக வங்கிக் கடனுக்கான தொகையை ஒதுக்கி வைத்து விட்டு, மிச்சத் தொகைக்கு சமூகப் பிரிவினர்களை மோத விட்டதைப் போல, உணவு வேளையில் இலவசப் பொதுக் குழாய்களை அடைத்தும், பாட்டில் நீர் - 10 ரூபாய், மீண்டும் நிரப்பிக் கொள்ள-5 ரூபாய் மட்டுமே என ''ஜீரோ-பி'' அறிவித்தும் தண்ணீரிலேயே 'மக்களுக்கான மாற்றுக்களை' சுட்டிக்காட்டியதை சாதனை என்றல்லாமல், வேற என்ன வென்று சொல்வது?

இப்பொருட்காட்சிப் பரவசத்தின் இடையில், ம.க.இ.க - பு.ஜ.தொ.மு.

## எதிரியின் நுழைவாயிலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

ஐந்து நாட்களாக உலக சமூக மன்றத் (WSF) திருவிழாவிற்கு அரசியல் தலைமீட்டை வெளியீடுகளாகவும், சுவரொட்டிகளாகவும் கொண்டு சென்ற ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. தோழர்கள், முத்தாய்ப்பாக 20-01-04 அன்று உ.ச.ம. நுழைவாயில் எதிரிலேயே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதற்கு முன்பாக உ.ச.ம. அரங்கிலிருந்த அறிவிப்பு ஒலிவாங்கியிலேயே தமிழில் ''உலக சமூக மன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வாயிலில் நடக்கவிருப்பதாக'' நமது தோழர்களால் அறிவிக்கப்பட்டது. 'காணாமல் போனவர்கள் பற்றிய அறிவிப்பு' என்று எண்ணி ஒலிவாங்கியை கையில் கொடுத்தார்கள் போலும் அங்கிருந்த தமிழ் தெரியாத அமைப்பாளர்கள்! உண்மைதான், கோரேகாவ் சாலையின் இருபுறத்திலும் காணாமல் போயிருந்த சோசலிசத்தை முதன்மைப்படுத்தும், செயலூக்கமுள்ள எதிர்ப்பை மீட்டெடுக்கும் முயற்சிதான் அது!

பறைகள் முழங்க, 'World Social forum' அல்ல, "World Spy Forum; 'உலக சமூக மன்றமல்ல', 'உலக உளவாளி மன்றம்' என அறிவித்துப் பாடிய கலைக்குழுவும், விளக்கியுரைத்த தோழரும், நுழைவாயிலருகே ஆயிரக்கணக்கில் திரண்ட கூட்டமும் உலக சமூக மன்றம் அதிர்ந்ததை வெளிக்கொணர்ந்தனர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் தனிநபர்களும் ஆர்ப்பாட்டத்தை ஒளிப்பதிவு செய்து கொண்டனர். தனியாக வெளியீடு விற்ற தோழர்களிடம் பிய்த்து பிடுங்கிய உ.ச.ம. தொண்டர்களும், சிவப்பு செக்யூரிட்டிகளும் இந்த இடத்தில் தமது கடமையாற்ற முன்வரவில்லை. ஒருவேளை அவர்களும், அவர்களை இயக்கும் உ.ச.ம. அமைப்பாளர்களும் புரிந்து கொண்டிருக்கலாம், பறைகளை முழக்கும் கரங்கள் பலம் வாய்ந்தவை என்பதை!





படிப்பகம்

www.padippakam.com

பெல்ட்டிலிருந்து விடுபட்டு, புரட்சிகர அரசியலின் காற்றைச் சுவாசிக்கக் கற்றுக் கொடுத்தனர்.

இந்த அரசியல் தலையீட்டின் வடிவம் மேலும் உரம் பெறத் துவங்கியது, சுவரொட்டிகளாக, இணையப் பதிவுகளாக, உ.ச.ம. வாயிலேயே நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக! (பார்க்க: பெட்டிச் செய்தி - உ.ச.ம. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்) வெளியீட்டின் வாயிலான அரசியல் தலையீட்டினால் சினம் கொண்டலைந்தவர்கள் இரு பிரிவினர். முதலாம் பிரிவினர், சி.பி.எம். கட்சியினர்; இரண்டாம் பிரிவினர், பன்னாட்டு அரசுசாரா நிறுவனங்களின் தலைமைப் பிரிவினர்.

பிரேசில் நாட்டு அரசுசாரா நிறுவனங்களைச் சேர்ந்தோர், நமது வெளியீட்டைத் தொடவே மறுத்தனரென்றால், நிறுவனமயமாக்கப்பட்டு வரும் சி.பி.எம். அணிகளோ கோபத்தை செயலில் தீவிரமாகக் காட்ட முடியாமல், உ.ச.ம.வுக்கு வாக்கப்பட்டதை எண்ணி பொறுமிக் கொண்டிருந்தனர். சில சமயங்களில் தங்களுடைய ஜனநாயகப் பண்புகளை வெளிப்படுத்தி, தங்களுக்கு புத்தி மட்டு என்பதையும் வெளிக்காட்டிக் கொண்டனர். (பார்க்க: பெட்டிச் செய்தி-ஏகாதிபத்திய சேவையில் சிவப்பு செக்யூரிட்டிகள்) சிலர் ''உங்களை இதுவரைக்கும் யாரும் ஒண்ணுமே பண்ணலியா'' என ஆச்சரியத்தோடு விசனப்பட்டனர். நமது தோழர்களிடம் முறுக்கிக் கொண்ட மேற்படி 'தோழர்கள்', உ.ச.ம. வாசலிலியே ஒட்டப்பட்டு, ஐந்து நாட்களாக அங்கேயே இருந்த 'ஏகாதிபத்தியத்தின் மலமே அரசு சாரா நிறுவனங்கள் (NGOs)' மற்றும் இதர உ.ச.ம.வை அம்பலப்படுத்தும் ஓவியங்கள் கொண்ட சுவரொட்டிகளை என்னவோ ஒன்றுமே செய்யவில்லை ஒருவேளை கருத்துக்களைவிட நபர்களைக் கண்டுதான் அதிகம் அஞ்சுகிறார்கள் போலும், அத்வானி இல்லாத பி.எம்.எஸ்-உடன் கூட்டணி சேர்வதைப் போல!



உ.ச.ம. மாநாட்டிற்குள் நுழைந்து ''கலகம்'': உ.ச.ம.வை அம்பலப்படுத்தும் வெளியீடுகளைக் கையிலேந்தி பிரச்சாரம் செய்யும் பு.ஜ.தொ.மு. - ம.க.இ.க. அணியினைச் சேர்ந்த தோழர்.

அதேவேளையில், நம்முடைய வெளியீடுகளை பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தனிநபர்களும், அறிவுஜீவிகளும் ஆர்வத்தோடு வாங்கி விவாதித்தனர். கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். கேளிக்கைகளை கண்டு வெறுப்புற்றிருந்த நம் நாட்டு மக்கள், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த அணிகள், நமக்கு ஆதரவும் நம்முடைய தைரியம், அரசியல் உறுதிக்கு பாராட்டும் தெரிவித்தனர். சில வெளிநாட்டு, உள்நாட்டு நபர்கள் தாமாக முன்வந்து நன்கொடைகள் அளித்தனர். தம்முடைய முகவரிகளை அளித்து, தொடர்பு கொள்ள வேண்டினர்.

கார்ட்டூன் ஓவியர் ஒருவர் வெளியீட்டை வெகுவாகப் பாராட்டி, அவற்றை தம்முடைய இணையத் தளத்தில் பதிவு செய்ய தாமாக முன்வந்து வாக்களித்தார். தென் கொரியா,

## திருடிப் பிழைக்கும் உளவாளிக் கூட்டம்!

உ.ச.ம.-வில் ஆங்காங்கே பல்வேறு கழைக்கூத்துக்கள் அரங்கேறிக் கொண்டிருக்க, இடையில் ஒலிக்கிறது ம.க.இ.க. வின் புரட்சிகரப் பாடல்களான, 'ஊரான் ஊரான் தோட்டத்திலே', 'நாடு முன்னேறுதுங்குறான்', 'இந்து என்னடா, முசுலீம் என்னடா' ஆகிய பாடல்கள். யாரென்று பார்த்தால், வழக்கமான நபர்களல்ல. லீசா (LEESA) என்ற தமிழ்நாட்டு தன்னார்வக் குழுவின் கைங்கர்யம்தான்! அந்தப் பாடல்களையும் அவை ஏற்படுத்தும் புரட்சிகர உணர்விற்கும் மாறாக, வெற்றுக் களியாட்டமாக நடத்தப்பட்டதைக் கண்டு கோபமுற்று தோழர்கள் தட்டிக் கேட்டவுடன், பிறகு அடக்கி வாசிக்கத் தொடங்கினர். மக்களைக் காட்டி, மக்களைச் சரக்காக்கி ரிப்போர்ட் கொடுத்து, உளவு வேலை பார்த்து காசு பார்க்கும் இந்தக் கூட்டம் நாணயமில்லாமல் புரட்சிகரப் பாடல்களைப் பாடுவதற்கு எந்த அருகதையுமில்லை.

மும்பை எதிர்ப்பியக்கம் 2004-இல் 'மகிளா ஜாக்ருதி' என்ற அமைப்பு நம்முடைய பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டு ஓவியக் கண்காட்சியில் இடம் பெற்ற சில குறிப்பிடத்தக்க ஓவியங்களைக் காலண்டர் அட்டைகளாக மாற்றி விற்றுக் கொண்டிருந்தது. நாம் அதைக் கண்ணுற்று தடுத்துக் கேட்டதற்கு, 'ஓவிய மூலம்' எனக் குறிப்பிடும் பகுதியில் 'PALA' (ம.க.இ.க.) என்பதற்குப் பதிலாக 'BALA' என்று குறிப்பிட்டது சொற்பிழையென்றும், தவறு என்றும் கூறினர். ஆனால், ஓவியங்களுக்கு அருகில் தங்களுடைய அமைப்பு செயற்பாட்டுத் தளமான 'பாலியல் தொழிலாளர்' சிக்கலை மையப்படுத்தி கருத்துக்கள் வெளியிட்டிருந்தனர். அந்தப் பொருட்பிழையையும் நாம் எடுத்துக் காட்டியவுடன், அமைதியில் ஆழ்ந்தவர்கள், ஆழமாக மூளையைக் கசக்கி 'உங்கள் அமைப்பிடம் அனுமதி பெறுகிறோம்' என்ற 'உயர்ந்த' முடிவுக்கு வந்தனர்.

ஏகாதிபத்திய நிறுவனங்கள் எறியும் எச்சில் இலையை நக்கிப் பிழைக்கும் பிராணிகள் சோற்றுத் தட்டிலும் வாய் வைக்கின்றன. இதற்கு நாம் அனுமதி வழங்க வேண்டுமாம்!


படிப்பகம்

இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்த சிலர் நமது தோழர்களை ஒளிப்பட த்தில் பதிவு செய்து பேட்டியெடுத் தனர். அவற்றைத் தமது இணையத் தளங்களில் வெளியிட்டனர். பின்நவீனத்துவ பாணியில், **WSF** என்ற சொல்லாடலை கட்டுடைத்து நாம் உருவாக்கியிருந்த கேலிச்சித்திரம் பலருடைய ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது.

முதன்முறையாக உ.ச.ம.வுக்கு வந்து அதனுடைய பிரம்மாண்டத்தில் பிரமித்துப் போன பல தனிநபர்களும், அடுத்த சில நாட்களில் தங்கள் சொந்த அனுபவத்தில் உ.ச.ம.வின் கேளிக்கை, ஆரவாரங்களில் கசப்புற்ற நிலையில், நமது தோழர்களைப் பாராட்டி, தங்கள் கருத்துக்களை வெளியீடு தாங்கி வந்திருப்பதாகக் கூறி வாங்கிக் கொண்டனர்.

சில அரசு சாரா நிறுவனங்களின் **(NGOs)** அணிகள் பன்னாட்டு நிறுவனங்களிடம் பணம் வாங்குவதை ஒப்புக் கொண்டனர். குறிப்பாக, வெளிநாட்டு அரசுசாரா நிறுவனங்கள் அவ்வாறு பணம் வாங்குவதற்கான கொள்கை விளக்கமாக, 'மக்களிடமிருந்து ஏகாதிபத்தியம் பணம் பெறுகிறது; ஏகாதிபத்தியத்திடமிருந்து நாங்கள் பணம் பெறுகிறோம்; எப்படிப் பார்த்தாலும் மக்கள் பணம் தானே' எனக் கூறி தங்கள் மேதாவித்தனத்தை காட்டினர். இரவில் தின்னும் வாழைப்பழம்தான் காலையில் மலமாக வெளிவருகிறது; எனவே 'மலமும், வாழையும் ஒன்றுதான்' என்பது போல் வாதிடும் மேற்கண்ட புத்திசாலிகள், பணம் வாங்கும் விசயத்தில் மட்டுமின்றி, வாழைப்பழம் தின்பதிலும் தங்கள் கொள்கை விளக்கத்தை நடைமுறைப்படுத்திக் காட்டினால் நல்லது.

''உ.ச.ம. ஒரு அமைப்பல்ல; அது வெறுமனே பலசக்திகளும் ஒன்று கூடும் தளம் மட்டுமே'' என யெச்சூரி பாணியில் வாதிப்பவர்கள், கேவலம் தனிநபர்கள் கூட ஈராக் யுத்தத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் பொழுது, உ.ச.ம. ஒருங்கிணைப்புக் குழுவும் சரி, அதன் கூட்டத் தீர்மானங்களும் சரி மௌனம் சாதித்ததைக் கேட்டபொழுது, அவர்களும் மௌனம் சாதிக்கத் தொடங்கினர். மார்க்சிஸ்டு கட்சி சார்பு அறிவுஜீவியான பிரபாத் பட்நாயக்கிடம் நமது வெளியீட்டைக் கொடுத்துப் பேச முயன்றபோது ''நான் பேச விரும்பவில்லை'' என்றார் பட்நாயக். சுதந்திரக் கருத்துப் பரிமாற்றத்தின் தகுதிக்கும் இது ஒரு சான்று.




**உ.ச.ம.வை அம்பலப்படுத்தும் ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு.வின் கேலிச் சித்திர சுவரொட்டிகள், மாநாட்டின் நுழைவாயிலேயே ஒட்டப்பட்டன.**

பகுதியளவிற்கு நம்மை ஏற்றுக் கொண்டவர்கள், 'உள்ளே வந்து பேசுங்கள், நிறைய பேருக்கு உங்கள் கருத்துக்கள் தெரிய வரும், இல்லையேல் தனிமைப்பட்டுப் போவீர்கள்' என அறிவுரை வழங்கினர். ஆனால், கருத்தரங்குகளின் இறுதிநாளில் நமது தோழர்கள் இரு கைகளிலும் வெளியீடுகளை உயரத் தூக்கி நின்று முழங்கிய பொழுது, மக்கள் ஓடோடி வந்து வாங்கிச் சென்றனர். 'தலையீடு என்பது வெளியிலிருந்து கலகம் புரிவது, உள்ளுக்குள் நெளிந்து கொண்டிருப்பதல்ல' என்பதை நமது தோழர்கள் சொற்களாலும், செயல்களாலும் விளக்கினார்கள். ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்ட உ.ச.ம. அரங்கில், நம்முடைய ஒரு வெளியீடோ, பிரசுரமோ தரையில் கிடக்காதது, கருத்துக்களுக்கு கிடைத்த அங்கீகாரத்தை வெளிப்படுத்தும் ஒரு சான்றாக அமைந்தது.

''சோசலிசமே மாற்று உலகம்'' என நாம் தெளிவாக அறைகூவல் விடுத்ததும், உ.ச.ம.வின் 'இன்னொரு உலகம்' என்ற பொய்யான சோற்று மூட்டைக்குள் ஒளிந்திருக்கும் பலவகைப்பட்ட பெருச்சாளிகளை அம்பலப்படுத்தியதும், உ.ச.ம.வின் அரசியல் முடிவுகளற்ற கேளிக்கை, ஆரவாரக் கூத்துக்களுக்கு மத்தியில் அரசியல் விவாதங்களை ஏற்படுத்தியது. 'சோசலிசமே மாற்று' என்பதை சில வெளிநாட்டவர்கள் கடுமையாக எதிர்த்து வாதம் புரிந்தனர். ஏகாதிபத்தியங்களின் கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரங்களுக்கு முழுமையாக பலியாகிப் போன அந்நபர்களுக்கு, 'சோசலிசம்' என்ற சொல்லே வேம்பாய்க் கசந்தது.

இத்தகைய நபர்களைக் குறிவைத்து உருவாக்கப்பட்ட 'மும்பை எதிர்ப்பியக்கம் - 2004'-இன் ''இன்னொரு மக்கள் உலகத்தைக் கட்டுவோம்'' என்ற முழக்கம், அவர்களுக்கு இனித்திருக்கும் என்பதை குறிப்பிட வேண்டியதில்லை. ஏகாதிபத்தியங்களின் கம்யூனிச எதிர்ப்புத் திட்டத்தை தன்னுடைய போர்த் தந்திரமாகக் கொண்ட உ.ச.ம.வும் கம்யூனிசப் பிரச்சாரத்தை மறைத்துவிட்டு, 'மக்கள் உலகம்' என சந்தர்ப்பவாதமாக ஆள்பிடிக்கும் மும்பை எதிர்ப்பியக்கம் 2004-க்கும்

www.padippakam.com

இடையில் நமது தோழர்கள் தமது கம்யூனிச அரசியலையும், அதன் உண்மையான பாரம்பரியத்தையும் 'எந்தக் குற்றவுணர்ச்சியோ, கூச்சமோ' இன்றி, உறுதியோடு கம்பீரமாக ஏந்திச் சென்றனர்.

நம்முடைய தலையீடுகள் மேற்கண்ட முறையிலென்றால், புனித லயோலா கல்லூரி தன்னுடைய அரசியல் தலையீட்டை குப்பைத் தொட்டியில் வெளியிட்டிருந்தது. குப்பைத் தொட்டியில் புஷ் படத்தை ஒட்டி, 'குப்பைத் தொட்டியை வழங்கியவர்கள் லயோலா கல்லூரி' எனக் குறிப்பிட்டிருந்தனர். அதோடு மேற்படி புஷ் நாட்டிற்கு ரிப்போர்ட் கொடுக்கும் மிஷினரிகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தால் தேவலாம்.

தமிழ்நாட்டு தி.மு.க.வின் அரசியல் தலையீடு வேறுவிதமாக இருந்தது. மனித உரிமைக்காக உ.ச.ம.வில் கலந்து கொண்டார்களாம்! மாஞ்சோலையைப் பற்றிக் கேட்ட தோழர்களுக்கு, நரசிம்மராவ் புன்னகையை அவர்கள் வழங்கிச் சென்றார்கள். இறுதி நாள் ஊர்வலத்தில், 'உலகமய எதிர்ப்புப் போராளிகள்' நிரோத் பலூனேந்தி வந்தார்கள். ஏகாதிபத்தியத்தை தகர்த்தெறிய, உலகமயத்தை உடைத்தெறிய செயல்தந்திரங்களை அச்சிட்டு வழங்குவார்கள் என ஆர்வத்தோடு வாங்கினால், அனைத் தும் 'ஆணுறையை சரியாகப் பயன்படுத்தும் முறைகள்' குறித்த விளக்கப் படங்கள்!

உண்மைதான், தேவையே கண்டுபிடிப்பை வழங்குகிறது. 17-ஆம் தேதி இரவில் உ.ச.ம.வில் பங்கேற்க வந்திருந்த தென் ஆப்பிரிக்க நீதிபதி சிராஜுதீன் தேசாய் என்பவன், உடன் வந்திருந்த எய்ட்ஸ் விழிப்புணர்வு அமைப்பைச் சேர்ந்த ஐசாக்ஸ் என்ற பெண்ணை பாலியல் பலாத்காரத்துக்குட்படுத்தியுள்ளான். ஐசாக்ஸ் அவனிடம் ஆணுறை அணிந்து கொள்ளுமாறு கெஞ்சினாராம். ஆணாதிக்க பாலுறவு வெறிக்கு தேவைப்படுவது ஆணுறை. ஏகாதிபத்திய இலாப வெறிக்குத் தேவைப்படுவது உ.ச.ம. என்ற முகத்திரை. ஒற்றுமை என்னவென்றால், வன்முறைக்குள்ளாக்கப்படும் மக்களுக்காக, உ.ச.ம.வில் பங்கேற்கும் நாகரிக சமூகத்தின் பிரதிநிதிகள் ஏகாதிபத்தியங்களிடமும் மன்றாடுகிறார்கள், ''உ.ச.ம. என்ற ஆணுறையை அணிந்து கொள்ளுங்கள்!'' நம்மிடம் எடுத்துரைக்கிறார்கள் பிரேசில் அரசுசாரா நிறுவனங்களிலிருந்து உள்ளூர் சி.பி.எம்; தன்னார்வக் குழுக்கள் வரை-''உ.ச.ம. பாதுகாப்பானது!''.

நரிகளின் குகையில் நுழைந்து அவற்றின் வாலறுத்து வெளிவந்தனர் புரட்சிகர சக்திகள். செயலூக்கமுள்ள அரசியல் தலையீடு என்பதும், எதிரிக்கு எதிரானது என்பதும் எதிரியை நகலெடுப்பதல்ல. மாறாக, எதிரியை அம்பலப்படுத்திப் போராடுவதே, வெளிப்படையாக எதிரியை அறிவித்துப் போராடுவதே என்ற அடிப்படையில் ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. தோழர்கள் தம் பிரச்சாரத்தை விரிவாக எடுத்துச் சென்றனர். மொத்தத்தில் குலுங்கியதும், குப்புறவிழுந்ததும் மும்பையல்ல, உ.ச.ம. தான்! ஏகாதிபத்திய வாலில் பற்றிய நெருப்பாய் ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. அமைப்புகளின் அரசியல் தலையீடுகள், எதிர் நடவடிக்கைகள் ஆகியவை சுட்டுப் பொசுக்க உ.ச.ம.வின் கருத்தரங்குகள், நுழைவாயில்கள், விவாதித்த நபர்கள் அனைத்திலும் பற்றி மூண்டது எதிர்ப்பின் நெருப்பு. இத்தகையதொரு உ.ச.ம. எனும் மாபெரும் உலகமய எதிர்ப்புத் தளத்தில் நின்று கொண்டு அருந்ததி ராய் சொன்னாராம்: ''ஏகாதிபத்தியங்களை முறியடிக்க வேண்டுமானால், உள்நாட்டில் ஏகாதிபத்திய நிறுவனங்களை ஒழித்துக் கட்ட வேண்டும்.'' சரிதான், ஆனால் யார் ஒழித்துக் கட்டுவது? உ.ச.ம. கஞ்சாப் போதையில் ஆடிக் களித்த இந்த அரும்போராளிகளைக் கொண்டா? இன்னொரு இடத்திலிருந்தும் அழைப்பு வருகிறது. ''மும்பை எதிர்ப்பியக்கம் - 2004 '' அறைகூவி அழைக்கிறது, ''போர்க்குணமிக்க போராட்டங்களில் உ.ச.ம.வுடன் இணைந்து போராடுவோம்!'' ஆணுறை விநியோகமும், ஆபாச ஆட்டங்களும், ஆரவாரக் கேளிக்கைகளும், பலவண்ண அரசியல் கோட்பாடுகளும் போர்குணமிக்க போராட்டங்களில் ஈடுபட்டால், அது ஏகாதிபத்திய எதிர்ப்பாக இருக்காது. மாறாக, சோசலிச எதிர்ப்பாகவே இருக்கும். எதிரி சக்திகளின் தலைமைக்குக் கட்டுப்பட்டு இயங்கும் எதிர்ப்புரட்சி சக்திகளை தோழமை சக்திகளாக வென்றெடுக்க முயற்சித்தால், விளைவு நேர் எதிராகத்தான் இருக்கும்.




**உ.ச.ம.வை அம்பலப்படுத்தி ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. இணைந்து வெளியிட்ட பல்வேறு துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள்.**

உ.ச.ம. மாநாட்டின் ஐந்தாம் நாளன்று அதன் நுழைவாயிலிலேயே 'உ.ச.ம. எதிர்ப்பு' ஆர்ப்பாட்டம் நடந்தேறியது. கலந்து கொள்ளச் சென்ற கலைக்குழுத் தோழர்களை, ஏற்கெனவே திருச்சி பேருந்து நிலையத்தில் பார்த்திருந்த திருச்சி நகர பெண் விபச்சாரிகள், ''நீங்க எங்க இங்க வந்துரிக்கீங்க'' எனக் கேட்டார்களாம். அவர்கள் உ.ச.ம.வின் பிரதிநிதிகள். நாம் வரக் கூடாத இடம்தான்! என்ன செய்வது, எதிரியை நிலைகுலையச் செய்ய வேண்டுமென்றால், நாம் பல இடங்களில் நுழைய வேண்டியிருக்கிறது. திருவரங்கத்து கருவறைக்குள் நுழைந்ததைப் போல, திருவையாற்று ஆராதனைக்குள் நுழைந்ததைப் போல, உ.ச.ம.வின் திருவிழாவுக்குள் நுழைந்ததைப் போல...புரட்சி முடியும் வரை நுழைந்துதானாக வேண்டும்; நைச்சியமாக நயந்து அல்ல, உரத்து முழங்கியபடி!

**— மக்கள் கலை இலக்கியக் கழகம்,**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி.**


படிப்பகம்

www.padippakam.com

## "சோசலிசமே ஒரே மாற்று"

# ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் அறைகூவல்!

"ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டுவோம்! உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்துவோம்!" எனும் முழக்கங்களை முன்வைத்து, சனவரி மாதம் 19, 20 ஆகிய இருதினங்களில், மும்பய் நகரில் கருத்தரங்கமொன்றை ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம், வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது. இக்கருத்தரங்கின் இரண்டாம் நாள் மாலையில், ஆர்ப்பாட்ட ஊர்வலமும், அதன் முடிவில் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டன.

தன்னார்வக் குழுக்களின் தலைமைப் பீடம் போல உருவாக்கப்பட்டுள்ள உலக சமூக மன்றம் (WSF), தனது நான்காவது சர்வதேசியக் கருத்தரங்கை மும்பய் கோரேகான் நகரில், சனவரி 16 தொடங்கி 21 வரை நடத்தியது. இந்த உலக சமூக மன்றம் ஏகாதிபத்திய கைக்கூலி அமைப்பு என்ற உண்மை ஏற்கெனவே பு.ஜ.வின் இரு இதழ்களில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

கருத்தளவில் மட்டுமல்லாமல், செயல் தளத்திலும் உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே, ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம், தனது இரண்டு நாள் கருத்தரங்கை மும்பய் நககரில் உள்ள தாதர் அம்பேத்கர் பவனில் நடத்தியது. ஏறத்தாழ, 1,500-க்கும் மேற்பட்ட தோழர்களும், உழைக்கும் மக்களும் கலந்து கொண்ட இக்கருத்தரங்கம், கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பார்களே, அதனைப் போல நடந்து முடிந்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தில், தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா, உ.பி., புதுதில்லி ஆகிய மாநிலங்களில் இயங்கிவரும் 21 புரட்சிகர மக்கள் திரள் இயக்கங்கள் உறுப்பினர்களாகப் பங்கு பெற்றுள்ளன. ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் நடத்திய மாநாட்டின் நோக்கங்களை விளக்கியும்; உலக சமூக மன்றத்தையும், அவ்வமைப்பு நடத்திய மாநாட்டின் தீய உள்நோக்கங்களை அம்பலப்படுத்தியும் துண்டுப் பிரசுரங்களும், சிறு வெளியீடுகளும் அந்தந்த மாநில மொழிகளில் வெளியிடப்பட்டு, இம்மாநிலங்கள் அனைத்திலும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தில் பங்கு பெற்றுள்ள மக்கள் கலை இலக்கியக் கழகமும், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் இணைந்து, உலக சமூக மன்றத்தின் ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனத்தையும்; அதற்குப் பல்லக்குத் தூக்கும் போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத்தையும் அம்பலப்படுத்தும் கேலிச் சித்திரங்களை, "உலக சமூக மன்றத்துக்கு எதிராக" எனும் தலைப்பில் சிறு நூலாக வெளியிட்டதோடு, அவ்வெளியீட்டை உலக சமூக மன்றத்தின் கருத்தரங்கத்திற்குள்ளேயே நுழைந்து விற்றும், எதிரியை அதனின் கோட்டைக்குள்ளேயே அம்பலப்படுத்தின. மேலும், கம்யூனிசப் புரட்சியாளர்களும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிவரும் மக்களும் "உலக சமூக மன்றத்தை" எதிரியைப் போல்தான் அணுக வேண்டும் என்பதை விளக்கி "எதிரியை அறிக" எனும் தலைப்பில், ஆங்கில மொழியில் ஒரு சிறு நூலை வெளியிட்டும், இவ்விரு அமைப்புகளும் பிரச்சாரம் செய்தன. மும்பய் நகரில் தமிழ் மக்கள் குவிந்து வாழும் தாராவி பகுதியிலும் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., தோழர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் நடத்திய கருத்தரங்கத்திற்குத் தமிழர்களை அணிதிரட்டினர்.

●●●

நான்கு அமர்வுகளாக நடத்தப்பட்ட இக்கருத்தரங்கின் தொடக்க அமர்வில், **மும்பையைச் சேர்ந்த பேராசிரியர் மனோரமா சாவுர், முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே மற்றும் தில்லியைச் சேர்ந்த எழுத்தாளர் பங்கஜ் சிங்** ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

பேராசிரியர் **மனோரமா சாவுர்** தனது உரையில், "சமூக நலக் காடுகள் என்ற பெயரில் இந்தியாவில் புகுத்தப்பட்ட ஐ.நா.வின் காடு வளர்ப்புத் திட்டத்தின் உண்மையான நோக்கம், தனியார் முதலாளிகள் நடத்தி வந்த காகித ஆலைகளுக்குத் தேவையான மூலப் பொருள் - யூகலிப்டஸ் மரப் பட்டைகள் - தங்கு தடையின்றிக் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடு

**கருத்தரங்கத் தீர்மானங்களை விளக்கி நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கு கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் முன்னணித் தோழர்கள்.**






படிப்பகம்

www.padippakam.com

தான்' என்பதைப் பல புள்ளிவிவரங்களோடு அம்பலப்படுத்திப் பேசினார்.

**முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே,** "இன்றைய உலகமயப் பொருளாதாரம் என்பது சூதாட்டப் பொருளாதாரம்; இந்தச் சூதாட்டப் பொருளாதாரத்தால் இலாபம் அடைபவர்கள் இலண்டன், டோக்கியோ, நியூயார்க் நகரங்களில் வாழும் பணப் பெருச்சாளிகள்தான்" எனத் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

"ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் தொழில்நுட்ப வளர்ச்சி, தொழிலாளர்களை வேலையை விட்டுத் துரத்துகிறது; அதேசமயம், இத்தொழில்நுட்பத்தால் பலன் அடையும் நடுத்தர வர்க்கத்தை, ஏகாதிபத்தியவாதிகள் தங்களின் சமூக அடித்தளமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்" எனக் குறிப்பிட்ட ஆனந்த் தெல்தும்ப்டே, "சர்வதேச உற்பத்தியும், சந்தையும் வளர்ந்து வருகிறது. இது, சோசலிச உலகம் சாத்தியம் என்பதைக் கட்டியம் கூறுவதாகும்" என விளக்கினார்.

●●●

கருத்தரங்கின் முதல் அமர்வு, "ஏகாதிபத்திய தாக்குதலும் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களும்" எனும் தலைப்பில் நடைபெற்றது. **அகில இந்திய உழவர் உழைப்பாளர் கழகத்தின் சார்பாக தோழர் ஆஷிஷ் மித்தல் மற்றும் புரட்சிகர மக்கள் உரிமைக் கழகத்தின் சார்பாக தோழர் பி.பி. ஆர்யா** ஆகியோர் இத்தலைப்பு குறித்து உரையாற்றினார்கள்.

இப்பொருள் குறித்து அகில இந்திய உழவர் உழைப்பாளர் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்ட அறிக்கை, "தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் ஏழை நாடுகளின் விவசாயிகள், பழங்குடியினர், மாணவர்கள், தொழிலாளர்கள், பெண்கள் மீது ஏகாதிபத்தியங்கள் தொடுத்துவரும் பொருளாதாரத் தாக்குதல்களையும்; இன்னொருபுறம் தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் ஈராக், ஆப்கான் மீது நடத்தப்பட்ட நேரடியான ஆக்கிரமிப்புப் போர்களையும்" குறிப்பிட்டது. அதேசமயம், ஏகாதிபத்தியவாதிகளின் இத்தாக்குதல்களுக்கு எதிராக ஐரோப்பாவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும், இந்தியாவிலும், நேபாளத்திலும் மக்கள் நடத்திவரும் ஆர்ப்பாட்டங்களையும், ஆயுதப் போராட்டங்களையும் பற்றி விரிவாக எடுத்துக் கூறிய இவ்வறிக்கை, "ஏகாதிபத்திய






**கருத்தரங்கில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற ஆந்திராவின் அருணோதயா (மேலே), தமிழகத்தின் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் (கீழே) கலைநிகழ்ச்சிகள்.**

உலகில் தீவிரமடைந்து வரும் முரண்பாடுகள், அதற்கு எதிராகப் புரட்சிகரப் போராட்டங்களை வளர்த்து எடுத்துச் செல்வதற்கான வாய்ப்புகளை வழங்கியுள்ளன" என்ற நம்பிக்கையை மக்கள் முன் ஆணித்தரமாக வைத்தது.

கருத்தரங்கின் மாலையில் நடந்த பொது அமர்வில் உரையாற்றிய **இந்தியத் தொழிற்சங்க மையத்தைச் (TUCI) சேர்ந்த தோழர் பேபி,** "பன்னாட்டு முதலாளிகள் இந்தியாவின் வளமான விளைநிலங்களைக் கைப்பற்றுவதற்காகப் புகுத்தப்படும் குத்தகை விவசாயம், இந்திய விவசாயிகளை உயிரோடு கொல்லுவதாகும்" எனக் குறிப்பிட்டார்.

**நேபாள மக்கள் அதிகாரப் போராட்ட குழுவைச் சேர்ந்த லட்சுமணன் பந்த்,** "உலகத்தின் ஒரே 'இந்து' நாடான நேபாளத்தில், புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலைமையில் திரண்டுள்ள மக்கள் தற்பொழுது இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடுவதில்லை. மாறாக, ரசியப் புரட்சித்தினமான நவம்பர் 7-ஐயும்; லெனின் பிறந்த நாளையும்; சீன விடுதலை நாளையும் கொண்டாடுவதாக"க் குறிப்பிட்டார்.

**தோழர் கிரிஜா குப்தா,** டாடா பவர் கம்பெனி தொழிலாளர்கள், அந்நிறுவனத்திற்கு எதிராக நடத்திவரும் தியாகம் செறிந்த போராட்ட அனுபவங்களை எடுத்துக் கூறினார். மேலும், புனே நகரில் செயல்படும் **"உண்மை விழையும் விவசாய உழைப்பாளர் கழகத்தை"ச் சேர்ந்த தோழர் கிசோர் தமாலே, அகில இந்திய உழவர் உழைப்பாளர் கழகத்தைச் சேர்ந்த தோழர் தேவ்ராவ் அயில்வார் மற்றும் தோழர் ஜி.பி. மிஸ்ரா,** மக்கள்



படிப்பகம்

www.padippakam.com



பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்து கருத்தரங்கில் கலந்து கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள்.

உரிமைக் கழகத்தைச் சேர்ந்த பி.பி. தாபா ஆகியோரும் தனியார் மயம் - தாராளமயத்திற்கு எதிரான போராட்டங்களையும், அதனின் அனுப வங்களையும் விளக்கி உரையாற்றினர்.

கருத்தரங்கின் இரண்டாம் நாள் நடந்த இரண்டாம் அமர்வு, ''ஏகாதிபத் தியத்துக்கு எதிரான போராட்டங்கள்: சரியான திசை வழியும் விலகல் போக்குகளும்'' எனும் தலைப்பில் நடந்தது. இந்த அமர்வில் **மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பாக தோழர் வீராச்சாமி; எழுச்சிகரத் தொழிலாளர் முன்னணியின் சார்பாக தோழர் அரவிந்த்** ஆகியோர் உரை யாற்றினார்கள். பிரான்சு நாட்டில் இருந்து வெளிவரும் **''சமர்''** என்ற இதழின் ஆசிரியர் **தோழர் இரயாகரன்** இத்தலைப்பு குறித்து அனுப்பியிருந்த அறிக்கையினை தோழர் அரசு கருத்த ரங்கில் வாசித்தார்.

இத்தலைப்பு குறித்து ம.க.இ.க. அளித்த அறிக்கை, ஏகாதிபத்தியத் திற்கு எதிரான போராட்டத்தில் இரண்டு விதமான விலகல் போக்குகள் எழுவதற்கான அடிப்படையைச் சுட்டிக் காட்டியது.

''கம்யூனிசத்துக்கு எதிரான உலக சமூக மன்றத்தோடு சித்தாந்தப் போராட்டத்தை நடத்தி, அதை அம்ப லப்படுத்தத் தயங்குவதில்தான் முதல் விலகல் போக்கு எழுகிறது'' எனக் குறிப்பிட்ட அவ்வறிக்கை, இதற்கு உதாரணமாக, கம்யூனிசப் புரட்சியா ளர்களான ''மும்பய் எதிர்ப்பு இயக்கம் - 2004'' உலக சமூக மன்றத்தின் கருத் தரங்குக்கு இணையான கருத்தரங்கை நடத்தியதைச் சுட்டிக் காட்டியது.

''ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான சுதந்திரமான மக்கள் இயக்கங்களைக் கட்ட முடியுமா? என்ற சந்தேகத்தில் இருந்துதான் இரண்டாவது விலகல் போக்கு எழுகிறது'' என ம.க.இ.க.வின் ஆய்வறிக்கைச் சுட்டிக் காட்டியது. ''இந்திய போலி கம்யூனிஸ் டுகள் உலக சமூக மன்றத்தை ஹூனான் எழுச்சியோடு ஒப்பிட்டு மாய்ந்து போகிறார்கள். மும்பய் எதிர்ப்பு இயக்கம் - 2004, ஏகாதிபத்தி யங்களுக்கு எதிராக நடந்துவரும் போர்க்குணமிக்க போராட்டங்களில் கலந்து கொள்ளுமாறு உ.ச.ம.விற்கு அழைப்பு விடுக்கிறது'' எனச் சுட்டிக் காட்டிய இவ்வறிக்கை, ''இதன் மூலம், நாடாளுமன்றப் புதைச் சேற்றுக்குள் சிக்கிக் கொண்டுவிட்ட போலி கம்யூ னிஸ்டுகளும்; போர்க்குணமிக்க போராட்டம் என்ற கவர்ச்சிக்குள் சிக்கிக் கொண்டுள்ள மும்பய் எதிர்ப்பு இயக்கமும் - ஏகாதிபத்தியம் விரித்து வைத்துள்ள பொறிக்குள் மாட்டிக் கொண்டிருப்பதை அம்பலப்படுத்தி யது.

''கம்யூனிசத்துக்கு எதிரான ஏகாதி பத்தியவாதிகளின் கையில் உள்ள ஆயு தம்தான் அரசுசாரா நிறுவனங்கள். கம்யூனிசப் புரட்சியாளர்கள் இவற் றோடு கூட்டணி வைத்துக் கொள்வதை ஒருபோதும் நினைத்துப் பார்க்க முடி யாது. நமது செயல்தந்திர முழக்கங் களின் கீழ் ஏகாதிபத்தியத்துக்கு எதி ரான புரட்சிகர மக்கள் இயக்கங்களைக் கட்டியெழுப்புவதுதான், அரசுசாரா நிறுவனங்களைத் துடைத்து எறிவதற் கான ஒரே மாற்று வழி'' என சரியான திசைவழியை ம.க.இ.க.வின் அறிக்கை சுட்டிக் காட்டியது.

இக்கருத்தரங்கில் **தோழர் இரயா கரன்** அளித்த அறிக்கை, ''ஐரோப் பாவில் நடந்த உலகமயத்திற்கு எதி ரான போராட்டங்களின் அரசியல் தன்மையையும்; அப்போராட்டங் களின் அரசியல் விளைவுகளையும்'' ஆராய்ந்தது.

''ஐரோப்பாவில் இயங்கிவரும் இடதுசாரி இயக்கத்தினரின் பலவீனத் தையும், சீரழிவையும் பயன்படுத்திக் கொண்டுவரும் அரசுசாரா நிறுவ னங்கள், அவ்வியக்கங்களின் அர சியல் முழக்கங்களைத் திருடிக் கொண்டதன் மூலம், புரட்சிகர எண்ணம் கொண்டவர்களை மழுங்க டிக்க முயன்று வருகின்றனர்'' என அம்பலப்படுத்திய இரயாகரன், ''ஐரோப்பாவில் நடந்த போர்க்குண மிக்க போராட்டங்களின் விளைவு,

ஆயிரக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்த்த ஊர்வலத்தின் ஒரு பகுதி.





படிப்பகம்

www.padippakam.com

எதிர்க்கட்சிகளுக்கு வாக்குகளைப் பெற்றுத் தந்ததைத் தவிர வேறு எதையும் சாதிக்கவில்லை'' என அம்பலப்படுத்தினார்.

''ஐரோப்பாவில் நடந்த இயக்கங்களில் வலுதுசாரி நவீன நாஜிக்கள், கிறித்தவ மத அமைப்புகள் தொடங்கி 'இடதுசாரி' டிராட்ஸ்கியவாதிகள் வரை பல பட்டறை அமைப்புகளும் பங்கு பெற்றன'' என அதன் அரசியல் தன்மையைச் சுட்டிக் காட்டிய அவர், இந்த திடீர் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள், ஒரு கட்டத்தில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, போராட்டத்தில் இருந்து கழண்டு கொண்டதையும் ஆதாரங்களோடு அறிக்கையில் அம்பலப்படுத்தினார்.

மேலும், ''1960-கள்தொடங்கியே, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை உருவாக்கி இயக்குவதற்காக பல்வேறு விதமான சித்தாந்தங்களை ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கியிருப்பதை''ச் சுட்டிக் காட்டிய தோழர் இரயாகரன், ''அரசு சாரா நிறுவனங்களுக்கு எதிராகச் சித்தாந்தப் போராட்டம் நடத்துவதும்; அதற்கு இணையாக வர்க்கப் போராட்டத்தை நடத்திச் செல்வதன் மூலமும்தான் அரசு சாரா நிறுவனங்களை அம்பலப்படுத்தி முறியடிக்க முடியும் எனத் தனது அறிக்கையில் முத்தாய்ப்பாகக் குறிப்பிட்டார்.

கருத்தரங்கின் மூன்றாவது அமர்வு, ''மாற்று உலகு சோசலிச உலகு மட்டுமே'' எனும் தலைப்பில் நடந்தது. இப்பொருள் குறித்து உரையாற்றிய **இந்தியத் தொழிற்சங்க மையத்தைச் சேர்ந்த தோழர் எம்.எம். சோமசேகரன்,** ''போலி கம்யூனிஸ்டுகள் சீனா மாதிரி, கேரளா மாதிரி, மேற்கு வங்கம் மாதிரி என நடைமுறை சாத்தியமான சோசலிசத்தைத் தேடுகிறார்கள். இத்தோல்வி மனப்பான்மையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வரும் அரசு சாரா நிறுவனங்கள், உலகமயத்திற்கு மனித முகத்தை மாட்டிவிட்டு, முதலாளித்துவத்திற்கு மாற்று முதலாளித்துவம்தான்; சோசலிசம் அல்ல எனப் பிரச்சாரம் செய்து வருவதாகக் குறிப்பிட்டார்.''

எனினும், ''உற்பத்தி சமூகமயமாவது உலகு தழுவிய அளவில் மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. இது, சோசலிசம் ஒரு வரலாற்றுத் தேவையே தவிர, தனிநபர்களின் அல்லது சில குழுக்களின் அகவயமான விருப்பம் அல்ல என்பதை நிரூபித்து வருவதை''ச் சுட்டிக் காட்டி, ''சோசலிசம், வரலாற்று வளர்ச்சியின் புறவயமான விதியாகும்'' என்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டார், தோழர் சோமசேகரன்.

கருத்தரங்கின் இறுதியாக ஊர்வலமும், அதன்பின் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. ஊர்வலத்தில் உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்தியும், சோசலிசம்தான் ஒரே தீர்வு என்பதை முன்வைத்தும், தமிழிலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் முழக்கங்கள் போடப்பட்டன. கருத்தரங்கம் நடந்த தாதர் பகுதியில் தொடங்கி, பொதுக்கூட்டம் நடைபெற்ற பரேல் பகுதியில் உள்ள காம்கார் மைதானம் வரையிலும் முக்கிய சாலைகளின் வழியாகச் சென்ற ஊர்வலம், ஆயிரக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்த்தது.

''ஈராக்கையும், ஆப்கானையும் நேரடியாக ஆக்கிரமித்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தும்; உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்தவும், எதிர்க்கவும் கோரி ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கு அறைகூவல் விடுத்தும்; உ.வ.க. (WTO) திணிக்கும் உலகமயம் ஏழை நாட்டு மக்களின் வாழ்வைச் சூறையாடுவதைக் கண்டித்தும்; சோசலிசமே ஒரே மாற்றுத் தீர்வு; மூன்றாம் உலக நாடுகளின்

## ''உ.ச.ம.விற்கு நன்றி!''

**வஞ்சக வலை விரித்த உலக சமூக மன்றத்தை எதிர்த்து ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. அமைப்புகள் மட்டுமே ஆறு வகையான சுவரொட்டிகள் (ஒவ்வொன்றும் 30' x 40' அளவு) பிரசுரம் (15,000), கேலிச் சித்திர வெளியீடு (5,000), தென் ஆப்பிரிக்க நீதிபதியின் பாலியல் பலாத்காரத்தை எதிர்த்த பிரசுரம், ஆர்ப்பாட்டம் என்ற வடிவங்களில் கூர்மையான அரசியல் பிரச்சாரத்தை ஆறு நாட்களில் வீச்சாக செய்தன. துருக்கியிலிருந்து வந்திருந்த மார்க்சிய - லெனினிய கட்சியினர் ஒரு துண்டு பிரசுரத்தை வினியோகித்தனர். மற்றபடி, உ.ச.ம.-வின் உண்மை உருவத்தை அரசியல் துணிச்சலுடன் தோலுரித்த ஒரே இயக்கம் நமது மட்டுமே! பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த ஏறத்தாழ 50,000-க்கும் மேற்பட்டோரிடையே நமது அமைப்புகளையும், அரசியலையும், செயல்பாணியையும் எடுத்துக்காட்ட வாய்ப்பளித்தமைக்காக ஒரு வகையில் உ.ச.ம.விற்கு நாம் நன்றி சொல்லலாம்!**

**இதேபோல், பல நாடுகளிலிருந்து மார்க்சிய - லெனினிய இயக்கங்களையும் கட்சிகளையும் வரவழைத்து, நமது அமைப்புகள் அவர்களிடம் அறிமுகமாக மிகவும் உதவிய மும்பை எதிர்ப்பியக்கம் 2004-இன் முதன்மை இயக்குநர்களுக்கும் நாம் நன்றிக் கடன் பட்டுள்ளோம்! மினி உ.ச.ம.-வை போல நடந்த மு.எ. 2004-இன் நிகழ்ச்சிகளையும், உ.ச.ம.-விற்கு எதிரான நமது ஆற்றல் வாய்ந்த எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் வந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டு புரட்சிகர மா-லெ இயக்கங்களின் பிரதிநிதிகளும் அணிகளும் ஒப்பிட்டுப் பார்த்திருப்பார்கள்! குட்டி உ.ச.ம.-வான ''மக்கள் போராட்டங்களுக்கான சர்வதேச கழக''த்தின் (ILPS-ன்) தீய செல்வாக்கிற்குப் பலியாகி விட்டோமா என்று மறுபரிசீலனை செய்யுமாறு அவர்களைத் தூண்டியிருக்கும் என்று நம்புகிறோம்!**




**உலக சமூக மன்றத்தைக் கூர்மையாக அம்பலப்படுத்திய ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு.வின் கேலிச் சித்திர சுவரொட்டிகள்.**


படிப்பகம்

www.padippakam.com

தலைமையில் வர்க்கப் போராட்டத்தை நடத்துவதன் மூலம் இதைச் சாதிப்போம்'' என்ற நான்கு தீர்மானங்கள் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை விளக்கும் முகமாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தில் பங்கு கொண்டுள்ள பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் உரையாற்றினர்.

ஆந்திராவின் அருணோதயா கலைக்குழு; தமிழக ம.க.இ.க.வின் மையக் கலைக்குழு; அகில இந்திய உழவர் உழைப்பாளர் கழகத்தின் பஞ்சாப் மற்றும் உ.பி.யைச் சேர்ந்த கலைக்குழுக்களின் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் கருத்தரங்கிலும், அதன் பின் நடந்த பொதுக் கூட்டத்திலும் நடைபெற்றன.

அருணோதயா கலைக்குழுவினர் இந்திய விவசாயிகளின் பிரச்சினைகளையும்; அப்பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு புரட்சிதான் என்பதையும் தங்களின் நிகழ்ச்சிகளின் மூலம் மக்கள் முன் வைத்தனர். கருத்தரங்களிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்ட மக்களுக்கு, ம.க.இ.க.வின் கலை நிகழ்ச்சிகள் புரிய வேண்டும் என்பதற்காக, அக்கலை நிகழ்ச்சிகள் பற்றிய சுருக்கமான விளக்கம் இந்தி மொழியில் கூறப்பட்டது.

எனினும், 'மார்க்சிஸ்டு' கட்சிக்கும், உலக சமூக மன்றத்துக்கும் உள்ள உறவை அம்பலப்படுத்திய ம.க.இ.க.வின் நையாண்டிப் பாடலும்; டாடா நிர்வாகத்தை எதிர்த்து மும்பய் தெருவில் தீ வைத்துத் தற்கொலை செய்து கொண்ட ஆனந்த் தால்வி, அக்தார்கான் என்ற இரண்டு தொழிலாளர்களின் சாவை பரிதாபகரமானதாகப் பார்க்கக் கூடாது; அத்தியாகத்தை தனியார்மயம் - தாராளமயத்திற்கு எதிரான கலகமாகப் பார்க்க வேண்டும் என்று உணர்ச்சிப் பெருக்கோடு பாடப்பட்ட ம.க.இ.க.வின் பாடலும், மொழி பெயர்ப்பின் வரம்புகளையும் தாண்டி பெரும் வரவேற்பைப் பெற்றது. கருத்தரங்கில் கலந்து கொண்ட பிற அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் ம.க.இ.க. கலைக் குழுவினரைத் தனியாகச் சந்தித்தும் பாராட்டினார்கள். மொழி போட்டுள்ள எல்லைக்கோடு, பாட்டாளி வர்க்கத்தின் உணர்ச்சிகள் ஒன்று கலப்பதைத் தடுத்துவிடாது என்பதற்கு இதுவும் ஒரு சான்று!

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிராகவும்; ''தீவிரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற பெயரில் அப்பாசிசக் கும்பல் தொடுத்துவரும் ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராகவும் உலகெங்கிலும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளின் முன்பு இக்கருத்தரங்கம் ''சோசலிசமே, ஒரே மாற்று'' என முன் வைத்ததன் மூலம், அவர்களின் மனதில் புதிய நம்பிக்கையை விதைத்திருக்கிறது; அவர்களின் போராட்டத்திற்குப் புதியதொரு ஆற்றலை தந்திருக்கிறது என்றால், அது மிகையானதல்ல.

— ம.க.இ.க., பு.ஜ.தொ.மு.,
தமிழ்நாடு.

## ''வாலிப - வயோதிக அன்பர்களே, வாருங்கள் மே.வங்கத்துக்கு!''

# – அழைக்கிறார் மாநில மார்க்சிஸ்டு முதல்வர்

கடந்த ஜனவரி 12-ஆம் நாளன்று இத்தாலிய வர்த்தகக் குழுவினர் மே. வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பண்டலாவில் தோல் பொருட்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தைத் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தமை உலர்வதற்குள்ளாகவே, ஐதராபாத்தைச் சேர்ந்த தனியார் விவசாயப் பண்ணை நிறுவனத்தினர் மே.வங்கத்தில் மருந்து உற்பத்திக்குத் தேவையான பயிர்களைப் பெருமளவில் பயிரிட முதல்வருடன் பேசி புதியதொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒரே நாளில் அடுத்தடுத்து தனியார் - அன்னிய நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களா? என்று அதிசயித்து முதலாளித்துவ பத்திரிகைகள் பூரிப்புடன் கட்டுரைகள் எழுதி 'இடதுசாரி' ஆட்சிக்குப் பாராட்டுகள் தெரிவித்தன.




இது தவிர, இந்தியா வின் நான்காவது பெரிய கணினி மென்பொருள் தயாரிப்பு-ஏற்றுமதி நிறுவனமான ''சத்தியம் கம்ப்யூட்டர்'' மே.வங்கத் தில் கணினி மென்பொருள் ஏற்றுமதி நிறுவனத்தைத் தொடங்க முன்வந்துள்ளது. 'இடதுசாரி' அரசின் வேண்டுகோளை ஏற்று, ''சாகரா'' நிறுவனத்தின் அதிபர் சுபத்ரா ராய், கிழக்கு கொல்கத்தாவில் சினிமா தொழில் நகரை நிறுவ ஒப்புதல் அளித்துள்ளார். இதோடு, சுந்தரவன சதுப்பு நில காட்டுப் பகுதியில் தனியார் சுற்றுலாத் தலம் அமைக்கவும் இந்நிறுவனம் 'இடதுசாரி' ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

தனியார்மயம் - தாராளமயத்தில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிவரும் 'இடதுசாரி' ஆட்சியாளர்கள், மருத்துவ - சுகாதாரத்துறையிலும் தனியார் நிறுவனங்களை அனுமதிப்பதென முடிவு செய்துள்ளனர். இளம்பிள்ளைவாத நோய்க்கு எதிராக போலியோ சொட்டு மருந்து பற்றி பிரச்சாரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதில், தனியார் நிறுவனங்களும் தன்னார்வக் குழுக்களும் முன்னுதாரணமாகச் செயல்பட்டுள்ளனவாம்! ''எனவே, இத்தகைய நிறுவனங்களை மருத்துவ - சுகாதாரத்துறையில் அனுமதிப்பதில் தவறேதுமில்லை; இதனால் மருத்துவச் சேவைகள் பெருகும்; சிகிச்சைக்காக இனி வெளிநாடுகளுக்கு ஓட வேண்டிய அவசியம் ஏற்படாது'' என்று தனியார்மயமாக்கலுக்கு நியாயம் கற்பிக்கிறார் மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர்.

ஏகாதிபத்திய நாடுகளில் வக்கிரமான பாலுறவு-கலவி இன்பத்துக்கான சாதனங்களை விற்பனை செய்யும் (Le Lingerie) ''செக்ஸ் ஷாப்'', இந்தியாவிலேயே முதன் முறையாக 'இடதுசாரிகள்' ஆளும் மே.வங்கத் தலைநகர் கொல்கத்தாவில் திறக்கப்பட்டுள்ளது என்பதுதான் இப்போதைய புதிய 'சாதனை'! ●



படிப்பகம்

www.padippakam.com

## மும்பய் எதிர்ப்பியக்கம் - 2004 (MR-2004)

# உலக சமூக மன்றத்தின் ''ஜெராக்ஸ்'' பிரதி

''மும்பய் எதிர்ப்பு இயக்கம் - 2004'' (மு.எ. 2004) என்ற அமைப்பு, ஏகாதிபத்திய உலகமயமாக்கம் மற்றும் போருக்கு எதிரான கருத்தரங்கமொன்றை, மும்பய் நகரில் உள்ள கோரேகாவ் பகுதியில், சனவரி மாதம் 17 தொடங்கி 19-ஆம் தேதி வரை நடத்தியது. மும்பய் எதிர்ப்பு இயக்கம், இக்கருத்தரங்கம் தொடர்பாக வெளியிட்ட ஆவணங்களில் உலக சமூக மன்ற(WSF)த்தில் பங்கு கொள்ளும், அவ்வமைப்பைக் கட்டுப்படுத்தும் அரசு சாரா நிறுவனங்களை ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் என மிகச் சரியாகக் கணித்திருந்தது. எனினும், உலக சமூக மன்றம், தனது நான்காவது சர்வதேசிய கருத்தரங்கத்தை நடத்திய அதே தேதிகளையொட்டி நடத்தப்பட்ட மும்பய் எதிர்ப்பியக்கத்தின் கருத்தரங்கம், உலக சமூக மன்றத்தின் கருத்தரங்கை அம்பலப்படுத்தும் விதத்திலோ, அதை முறியடிக்கும் நோக்கத்திலோ நடத்தப்படவில்லை. மாறாக, ''மு.எ. 2004'' தமது கருத்தரங்கம் தொடங்கும் முன்பே, **இது, உலக சமூக மன்றத்திற்கு எதிரானதல்ல** என வெளிப்படையாகவே கூறிவிட்டது.

மும்பய் எதிர்ப்பியக்கத்தின் கருத்தரங்கம், உ.ச.ம.-வின் கருத்தரங்கத்திற்கு இணையாக மட்டும் நடத்தப்படவில்லை; அதனின், ''கார்பன் காபி''யைப் போலவும் நடத்தப்பட்டது. உலக சமூக மன்றம், தனது கருத்தரங்கில் ஒரே சமயத்தில் கிட்டதட்ட 200 செயல் அரங்குகள், விவாத அரங்குகளை நடத்தியது என்றால், மு.எ., தனது கருத்தரங்கின் முதல் நாள் மதிய அமர்வில், ஒரே சமயத்தில் ஐந்து செயல் அரங்குகளையும் (Workshops); இரண்டாம் நாள் காலை அமர்வில், ஒரே இடத்தில் ஏழு செயல் அரங்குகளையும் நடத்தியது.

உலக சமூக மன்றத்தின் கருத்தரங்கில் கலந்து கொண்ட எழுத்தாளர் அருந்ததி ராய், மும்பய் எதிர்ப்பியக்க கருத்தரங்கிலும் கலந்து கொண்டார். ஒருபுறம், செயல் அரங்குகள் நடந்து கொண்டிருந்த பொழுதே, இன்னொரு புறம் மக்களின் பிரச்சினைகளைப் பற்றிய ஆவணப் படங்களும் திரையிடப்பட்டன. பொருட்காட்சிக்குச் செல்லும் நுகர்வோர், தனக்குப் பிடித்தமான ''ஸ்டாலுக்குள்'' நுழைவதைப் போல, மு.எ. கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரதிநிதிகள், தங்களுக்குப் பிடித்தனமான செயல் அரங்குகளில் நுழைந்து கொண்டனர்.

மேலும், உலகமயமாக்கம், பெண்கள், தலித்துகள், ஆதிவாசிகள் மீது தொடுக்கும் தாக்குதல்கள் குறித்துத் தனித்தனியாக நடத்தப்பட்ட செயல் அரங்குகள், அரசு சாரா நிறுவனங்களால் பரப்பப்படும் ''அடையாள அரசியல்'' நோய், மும்பய் எதிர்ப்பியக்கத்தினரையும் பிடித்தாட்டுவதைப் புரிந்து கொள்ள வைத்தது.

உலக சமூக மன்றத்தின் அரசியல் நோக்கமே, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சிதறடிப்பதுதான். எனவேதான், அந்த நோக்கத்திற்கேற்ப ஒரே சமயத்தில் 200 கருத்தரங்குகளை நடத்திப் பார்வையாளர்களைத் திணற அடிக்கிறது, அவ்வமைப்பு. அந்தப் பின் நவீனத்துவ வடிவத்தை, புரட்சிகர அமைப்பான மும்பய் எதிர்ப்பியக்கம் பின்பற்ற வேண்டிய தேவை என்ன என்பதுதான் நமது கேள்வி.

**''மாற்று உலகம் சாத்தியம்''** என்பது உலக சமூக மன்றத்தின் முழக்கம். மும்பய் எதிர்ப்பியக்கம் இம்முழக்கத்திற்கு இணையான **''மக்கள் உலகைக் கட்டியமைப்போம்''** என்ற முழக்கத்தை முன் வைத்தது. **''மாற்று''** என்பதற்கு **''மக்கள்''** என்ற வார்த்தையைப் போடுவதாலேயே அந்த முழக்கம் புரட்சிகரமானதாகி விடாது. ஏனென்றால், ஏகாதிபத்திய காலக் கட்டம் என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கட்டம். இதனால், சோசலிசத்தை குறைத்து மதிப்பிடும் எந்தவொரு முழக்கமும், புரட்சிகர இயக்கங்களைப் பின்னோக்கி இழுப்பதாகும். முதலாளித்துவ பொய்ப் பிரச்சாரத்திற்குப் பலியாகி, சோசலிசத்தை வெறுக்கும் ஐரோப்பியர்களை - உ.ச.ம.வில் கலந்து கொண்ட ஐரோப்பியர்களைக் கவருவதற்காகவே மு.எ. 2004 - இப்படிப்பட்ட மொன்னையான முழக்கத்தை முன் வைத்திருக்கிறது.

ஊர்வலத்தில் மட்டும் ''இன்குலாப் ஜிந்தாபாத்'' கோஷம் போடும் போலி கம்யூனிஸ்டுகள் கூட, உலக சமூக மன்றத்தின் கருத்தரங்க வாயில் முன், ''சோசலிச உலகம் சாத்தியம்'' என்றவாறு முழக்கத்தை முன்வைத்து, ''பேனர்''களைக் கட்டியிருந்தார்கள். அப்போலிகளைவிட, புரட்சிகர இயக்கமான மும்பய் எதிர்ப்பியக்கம் பின்தங்கிப் போனது உண்மையிலேயே பரிதாபகரமானதாகும். மேலும், மு.எ. 2004 நடத்திய செயல் அரங்கம் ஒன்று, ''ஏகாதிபத்தியத்திற்கு மாற்று'' என்ற தலைப்பில், சோசலிசம் உள்ளிட்டு, பல்வேறு மாற்று உலகங்களை அலசி ஆராய்ந்தது. **முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையே வேறு உலகம் உள்ளதா என்பதைப் புரட்சியாளர்கள் என்று கூறிக் கொள்ளும், மும்பய் எதிர்ப்பியக்கத்தினர்தான் விளக்க வேண்டும்.**

மும்பய் எதிர்ப்பியக்கம், உலக சமூக மன்றத்தினுள் நேர்மையான சக்திகளைத் தேடுகிறது. அவர்களை வென்றெடுப்பதற்காகவே, ''போராடும் அனைத்து சக்திகளையும் ஒருங்கிணைக்கும் கண்ணோட்டத்தை உருவாக்க வேண்டும்'' எனக் கனவு காண்கிறது. இந்த ஆதாயத்தைப் பெறவே அவர்கள் உலக சமூக மன்றத்தின்பால் மா-லெ கண்ணோட்டத்தைக் கடைப்பிடிக்காமல், குட்டி முதலாளித்துவ சமரசக் கண்ணோட்டத்தோடு அணுகி வருகிறார்கள்.

மும்பய் எதிர்ப்பியக்கம், தனது கருத்தரங்கை உலக சமூக மன்றத்தின் கருத்தரங்கிற்கு இணையாக நடத்தினாலும், அக்கருத்தரங்கம் நடந்த திடல், உ.ச.ம. கருத்தரங்கத் திடலுக்கு ''எதிராக'' அமைந்து விட்டது. இதனால், உலக சமூக மன்றத்தின் மாநாட்டிற்கு வந்திருந்த பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள், ''வென்றெடுக்கப்படாமலேயே,'' மும்பய் எதிர்ப்பியக்கக் கருத்தரங்கிற்கும் வந்தார்கள். அப்படி வந்தவர்களிடம் மும்பய் எதிர்ப்பியக்கத் தோழர்கள், பதிவுக் கட்டணம் ஐம்பது ரூபாய் கட்டி விட்டீர்களா? எனக் கறாராகக் கேட்டார்களே யொழிய, அவர்களிடம், ''உலக சமூக மன்றத்துக்கு இணையான மாநாடு நடத்த வேண்டிய அவசியம் என்ன? அதன் பின்னுள்ள அரசியல் தேவை என்ன?'' என்பது குறித்து கறாராக விவாதித்ததாகத் தெரியவில்லை.


படிப்பகம்


www.padippakam.com

மேலும், மும்பய் எதிர்ப்பியக் கத்தில் பங்கு கொண்டுள்ள மக்கள் போராட்டங்களுக்கான சர்வதேசக் கழ கத்தின் (ILPS) செயற்குழுவின் இந்தியப் பிரதிநிதிகள் இருவரில் ஒரு வரான **பாத்திமா நடேசன் பெர்னான்டு** அரசு சாரா நிறுவ னத்தைச் சேர்ந்தவர். இக்கருத்தரங்கில் பங்கு கொள்வதாக அறிவிக்கப்பட்ட கர்நாடக விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த **நஞ்சுண்ட சாமி** மற்றும் **பி.டி. சர்மா** ஆகியோர் அரசு சாரா அமைப் புகளில் ஐக்கியம் ஆனவர்கள். இ.பொ.க. (மா-லெ) (விடுதலை) அமைப்பைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் விழுங்குவதற்கு மூளை யாகச் செயல்பட்ட, பிலிப்பைன்சு நாட்டைச் சேர்ந்த **ஜோஸ் மரியா சிசோன்,** கருத்தரங்கிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதாக அறிவிக்கப்பட் டிருந்தது.

மும்பய் எதிர்ப்பியக்கத்தில் பங்கு கொண்டுள்ள அனைத்திந்திய மக்கள் எதிர்ப்பியக்கம் (AIPRF), மக்கள் போராட்டங்களுக்கான சர்வதேசக் கழ கத்தின் (ILPS) வாயிலாக அரசுசாரா நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. அனைத்திந்திய மக்கள் எதிர்ப்பியக்கம் வாயிலாக, அரசு சாரா நிறுவனங்கள் மும்பய் எதிர்ப்பியக்கத்தில் பங்கு பெறுகின் றன. இதுதான், மும்பய் எதிர்ப்பி யக்கம், ஏகாதிபத்தியக் கைக்கூலிக ளான அரசு சாரா நிறுவனங்களுடனும், அந்நிறுவனங்களின் சித்தாந்தவாதிக ளுடனும் போராடும் இலட்சணம்!

உலக சமூக மன்றம் உள்ளிட்டு, அனைத்து அரசு சார நிறுவனங்க ளோடும் எத்தகைய உறவும் வைத்துக் கொள்ளாமல், அந்நிறுவனங்களோடு சித்தாந்தப் போராட்டம் நடத்தியும்; புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலை மையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கங்களைக் கட்டியெழுப்புவதன் மூலமும்தான் அரசுசாரா நிறுவனங் களை முறியடிக்க முடியும். இந்த அணு குமுறையின் மூலம்தான் உலக சமூக மன்றத்தில் ஏமாந்து போய்ச் சேர்ந்துள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை வென்றெடுக்க முடியும் என்பதுதான் நமது நிலைப்பாடு.

இந்த மா-லெ அணுகுமுறைக்கு மாறாக, உலக சமூக மன்றத்தின்பால் சமரசக் கண்ணோட்டத்தைக் கடைப்பி டிப்பதன் மூலமும்; அவ்வமைப்பைப் போல, அதற்கு இணையான கருத்த ரங்கை நடத்துவதன் மூலமும் அரசு சாரா நிறுவனங்களில் உள்ள அப்பாவி




**''ஏகாதிபத்தியம் இல்லாத இன்னொரு உலகம் சாத்தியம்'' என்கிறது மு.எ. 2004-இல் பங்கு கொண்டுள்ள மக்கள் போராட்டங்களுக்கான சர்வதேசக் கழகம்: உ.ச.ம.வின் ''மாற்று'' உலகத்திற்கும் இவர்களின் இன்னொரு உலகத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடா உள்ளது?**

களை, நாணயமான சக்திகளை வென்றெடுக்க மும்பய் எதிர்ப்பியக்கம் செய்த முயற்சி தற்கொலைக்கு ஒப்பா னதாகும்.

இது ஒருபுறமிருக்க, உலக சமூக மன்றம் மும்பய் எதிர்ப்பியக்கத்தை பிளவுவாதிகள் என முத்திரை குத்தி யது; மு.எ.2004 நடத்திய கருத்த ரங்கை உலக சமூக மன்றத்திற்கு எதிரா னதாகப் பிரச்சாரம் செய்தது. இதன் மூலம், அரசுசாரா நிறுவனங்களில் உள்ள ''அப்பாவிகள்'' அந்தப் பக்கம் வென்றெடுக்கப்பட்டுவிடாமல் தடுத் தது. குறிப்பாக, வடமாநிலங்களில் இருந்து திரட்டி வரப்பட்ட ஏழை விவ சாயிகளுள் ஒருவர் கூட, மும்பய் எதிர்ப்பியக்கத்தின் கருத்தரங்கைக் காண வரவில்லை. இது, மும்பய் எதிர்ப்பியக்கத்தின் சமரசக் கண்ணோட்டத்திற்குக் கிடைத்த தோல்வியே ஆகும்.

மும்பய் எதிர்ப்பியக்கத்தின் கண்ணோட்டத்தை விமர்சித்தும்; உலக சமூக மன்றத்தின்பால் கம்யூனிசப் புரட் சியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறையை விளக்கியும் ''எதி ரியை அறிக'' (Know the Enemy) எனும் சிறு நூலை ஆங்கிலத்தில் நாம் வெளி யிட்டிருந்தோம். மும்பய் எதிர்ப்பி யக்கக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருந்த புரட்சிகர, முற்போக்கு அமைப்புகளிடம் இந்த நூலைக் கொடுத்து, நாம் அரசியல் விவாதங் களை நடத்தினோம். துருக்கி, ஸ்வீடன், பாஸ்க் (Basque), நார்வே, தென்கொ ரியா நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் நமது அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்கள், மும்பய் எதிர்ப்பியக்கத்தில் பங்கு கொண்டுள்ள தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் அமைப்புகள்; கர்நாடகா, அரியானா, உ.பி., மாநிலங்களைச் சேர்ந்த மாணவ அமைப்புகள் நமது நிலைப்பாட்டை மறுக்க முடியாமல் மௌனமாக நின்றார்கள்.

ஜோர்டான், கிரீஸ் மற்றும் இத்தா லியில் இருந்து வந்திருந்த பிரதிநி திகள்; ஐரோப்பா மற்றும் அமெரிக் காவைச் சேர்ந்த முன்னாள் போர் வீரர் சங்கத்தினர் ஆகியோர், ''உலக சமூக மன்றத்தோடு செயல் தந்திர ரீதியாக உறவு வைத்துக் கொள்ளலாம்'' என வாதிட்டனர்.

ஏகாதிபத்திய உற்பத்தி வளர்ச் சியைப் புரிந்து கொள்வதில் உள்ள குறைபாடுகளும்; மா-லெ சித்தாந் தத்தின் மீது ஏற்படும் அவநம்பிக் கையும்; புரட்சிகரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தைச் சுதந்திர மாகக் கட்டியெழுப்புவதில் சந்தே கமும், அவநம்பிக்கையும் கொள்வ துதான் இவர்களை உலக சமூக மன்றத் திற்கு வால் பிடிக்கச் சொல்கிறது. இந்த அமைப்புகளிடம் இந்தப் பல வீனங்கள் நீடிக்கும் வரை, அவர்களால் அரசு சாரா நிறுவனங்களை எதிர்த்துப் போராட முடியாது. மாறாக, இ.பொ.க. (மா-லெ) [விடுதலை] அமைப்பைத் தன்னார்வக் குழுக்கள் விழுங்கியதைப் போல இந்த அமைப்புகளையும் அரசு சாரா நிறுவனங்கள் விழுங்கிவிடும்!

**— மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, தமிழ்நாடு.**



படிப்பகம்

www.padippakam.com

# தேர்வுக் கட்டண உயர்வுக்கெதிராக மாணவர் போராட்டம்



தேர்வு கட்டணங்கள் மற்றும் கல்வி கட்டணங்கள் உயர்த்தியதை கண்டித்து சென்னை மாநிலக்கல்லூரி மாணவர்கள் இன்று காலை கல்லூரி வளாகத்திற்குள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது எடுத்தபடம்.

சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணத்தை பாசிச ஜெயா அரசு திடீரென பல மடங்கு உயர்த்தியுள்ளது. மாணவர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் இதை அறிவித்து, கட்டணத்தைச் செலுத்தியே தீர வேண்டும் என்ற நிர்பந்தத்தையும் உருவாக்கியது. சென்னையில், புரட்சிகர மாணவர் -இளைஞர் முன்னணியின் சார்பில், ''தேர்வுக் கட்டணத்தை உயர்த்தாதே! ஏழைமாணவர்கள் கல்வி பெறும் உரிமையைப் பறிக்காதே! உத்தரவிடுகிறது உலக வங்கி; உயருகிறது தேர்வுக் கட்டணம்! மயிரைப் புடுங்கவா மந்திரிகள்? மாணவர்களே, பெற்றோர் - ஆசிரியர் - உழைக்கும் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கிப் போராடுவோம்! உலக வங்கி கைக்கூலி பாசிச ஜெயாவின் ஆணவத்திற்கு முடிவு கட்டுவோம்!'' என்ற முழக்கங்கள் அடங்கிய சுவரொட்டிகள் கல்லூரிகள் மற்றும் விடுதிகளில் ஒட்டப்பட்டன.

இதைத் தொடர்ந்து மாணவர்களிடம் போராட வேண்டிய அவசியத்தை விளக்கி பிரச்சாரம் செய்து, போராட்ட வழிமுறை குறித்து கருத்து கேட்கப்பட்டது. இதனடிப்படையில், பொங்கல் விடுமுறைக்குப் பிறகு, வகுப்பு புறக்கணிப்பு மற்றும் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொங்கல் விடுமுறை முடிந்து கல்லூரி தொடங்கிய நாளன்றே, பு.மா.இ.மு. சார்பில், பாசிச ஜெயா அரசின் தேர்வுக் கட்டண உயர்வு அக்கிரமத்தை எதிர்த்து பரவலாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகள், மாணவர்களின் போராட்ட உணர்வுக்கு உத்வேகமூட்டின. அதைத் தொடர்ந்து ஜனவரி 21-ஆம் நாளன்று மாநிலக் கல்லூரியில், பேரவைத் தலைவர் மனோகர், செயலாளர் ஸ்டீபன், இணை செயலாளர் கணேசன் ஆகியோர் தலைமையில் மாணவர்களின் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர், அனைத்து கல்லூரி மாணவர்களின் கூட்டமைப்பு கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மறுநாள், ஜனவரி 22 அன்று தேர்வுக் கட்டண உயர்வை ரத்து செய்வதாக பாசிச ஜெயா அரசு அறிவித்தது. இது மாணவர்களின் உறுதியான - ஒற்றுமையான போராட்டத்துக்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றி; வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கும் உள்நோக்கத்தோடுதான் பாசிச ஜெயா அரசு தற்காலிகமாகப் பின் வாங்கியுள்ளது; உலக வங்கியின் கட்டளை இன்னமும் நீடிக்கிறது; இன்றைய வெற்றியைத் தற்காத்துக் கொள்ளவும் நாளைய வெற்றியை அறுவடை செய்யவும் அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாவோம் என்ற அடிப்படையில் பு.மா.இ.மு. சார்பில் சுவரொட்டி பிரச்சாரம் செய்யப்பட்டது. தேர்வுக் கட்டண உயர்வுக்கெதிரான பு.மா.இ.மு.வின் பிரச்சார இயக்கமும் போராட்டமும் மாணவர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, சென்னை.


## இப்போது விற்பனையில்...



**இமாலய சாகசம்**

**1962 இந்திய - சீனப் போர்: காரணங்களும் விளைவுகளும்**

— சுனிதிகுமார் கோஷ்

புதிய ஜனநாயகம் வெளியீடு விலை: ரூ.30

இந்திய - சீனப் போர் நடந்து நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த மோதலைப் பற்றிய பல கட்டுக்கதைகள் இந்திய அரசின் அதிகாரபூர்வ கருத்துக்களாக உள்ளன. இந்தப் போரின் உண்மையான நோக்கமென்ன, போருக்குப் பொறுப்பானவர்கள் யார், இதன் பின்னணியில் செயல்பட்ட சக்திகள் எவை என்பனவற்றை இந்நூலில் சுனிதிகுமார் கோஷ் வெளிக்கொணர்கிறார். இவற்றோடு, இந்தியப் போலிகம்யூனிசத் தலைமையின் இழிந்த தேசிய வெறியையும் அம்பலப்படுத்திக் காட்டுகிறார், கோஷ்.

நூல் கிடைக்குமிடம்:

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05







ஏகாதிபத்திய கைக்கூலிகளான உலக சமூக மன்றம் (WSF) மும்பையில் நடத்திய அனைத்துலக மாநாட்டை எதிர்த்து, ம.க.இ.க – பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகளால் வெளியிடப்பட்ட, தோழர் முகிலனின் கேலிச்சித்திரங்கள் அடங்கிய பிரசுரத்திலிருந்து...













படிப்பகம்